# சிர்ருள் இன்ஸான்

*ஆசிரியர்:* **குருபீடாதிபதி பூஅலி முஹம்மது யாஸீன் ஆலிம் சாஹிப் கலீபத்துல் பாஸியத்துஷ் ஷாதுலி**

بسم الله الرّحمٰن الرّحيم.

அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா செய்யிதுனா முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மாஈன்

## முன்னுரை

எனது தந்தையார் பூஅலி ஷாஹ் மதார் ஒலி அவர்கள் இயற்றிய "ஞானப்பிரகாசம்" சுத்த அத்வைத நூலாகும். சுத்த அத்வைதிகளே அந்நூலைப் படித்து விளங்கிக் கொள்ள முடியும். தத்துவஞானமறியாத மற்றோர்கள் அந்நூலை விளங்கிக் கொள்ள வேண்டுமானால், முதலில் கடவுளைப் பற்றிய சிந்தனை வேண்டும். அதனை சிந்திக்க வேண்டுமானால், நாஸ்திக, ஆஸ்திக கொள்கைகளை விளங்கிக் கொள்ள வேண்டும். பின்பு ஆஸ்திகர்களில் முக்கிய பிரிவினராகிய அத்வைதிகள், துவைதிகள், விஷிஷ்டாத்வைதிகள் இவர்களின் சித்தாந்தங்களை விளங்கிக் கொள்ள வேண்டும். இதனை விளங்கிக் கொண்டால், பிரமம், பிரபஞ்சம் இவற்றைப் பற்றிய ஞான விளக்கங்களை விளங்கிக் கொள்ள முடியும் என்ற கருத்தில் இந்நூலை பத்து அத்தியாயங்களாகப் பிரித்து எழுதியிருக்கிறேன். இந்நூலைப் படித்தபின் "ஞானப் பிரகாச" நூலைப் படித்தால் அந்நூலின் விளக்கம் மனதில் அமையும் என்ற நோக்கத்துடன் இந்நூலை எழுத முற்பட்டேன்.

இன்சான் இந்திரிய சத்தால் ஆனவன். ஆகையால் இவனுக்குத் தாழ்மைக் குணத்தைத் தவிர மேன்மைக் குணமில்லை என்றே மனிதர்களில் பெரும்பாலோர் நம்பியுள்ளனர். ஆனால் இறைவனோ தன் திருமறையில்

لَقَدْ خَلَقْنَا الْإِنسَانَ فِي أَحْسَنِ تَقْوِيمٍ

மனிதனை மேலினும் மேலாகப் படைத்ததாகக் குறிப்பிட்டுள்ளான். குர்ஆன் 95-4.

الَّذِي أَحْسَنَ كُلَّ شَيْءٍ خَلَقَهُ وَبَدَأَ خَلْقَ الْإِنسَانِ مِن طِينٍ ○ ثُمَّ جَعَلَ نَسْلَهُ مِن سُلَالَةٍ مِّن مَّاءٍ مَّهِينٍ ○ ثُمَّ سَوَّاهُ وَنَفَخَ فِيهِ مِن رُّوحِهِ

மனிதப் படைப்பை களிமண்ணிலிருந்து ஆரம்பித்து, இந்திரியச் சத்திலிருந்து அவனுடைய சந்ததியை உண்டாக்கி, பிறகு அதனில் தன் ரூஹிலிருந்து ஊதினேன் என்று இறைவன் தன் திருமறையில் குறிப்பிட்டுள்ளான்.(குர்ஆன் 21-32-7,8,9)

உலகில் படைக்கப்பட்ட வஸ்துக்கள் யாவும் பஞ்ச பூதங்களால் ஆனது. அதுபோல் மனிதரது சரீரம் பஞ்சபூத சேர்க்கையால் ஆனது. இவனில் ஊதப்பட்ட ரூஹு ஹக்குடைய ஸத்வ குணமுடையது. ஸத்வ குணத்தைக் கொண்டு தமோ குணத்தை வென்று இன்ஸான் காமிலாகவே இவ்விரு குணங்களும் இன்ஸானில் இறைவனால் அமைக்கப்பட்டுள்ளது. இன்ஸான் காமிலே அல்லாஹ்வின் கலீபாவாக அருகதையுடையவர்கள்., இவர்களது கல்பே அல்லாஹ்வின் அர்ஸு. இவ்விதமானவர்கள் தோன்றியபுரத்தில் அல்லாஹ்வின் கலீபாவாகவும் இவர்களின் அகமியம் ஹக்காகவும் இருக்கிறது.இவற்றை இந்நூலில் விளக்கியுள்ளேன். இந்நூல் இன்ஸானின் அகமியத்தை விளக்குவதால் இந்நூலுக்கு **"சிர்ருல் இன்ஸான்"** என்ற பெயரை சூட்டியுள்ளேன். இன்ஸான் தாழ்ந்த குணத்தைப் பிரதிபலிக்கப் படைக்கப்படவில்லை. தாழ்ந்த குணத்தை வென்று ஸத்வ குணத்தில் தரிபடவே படைக்கபட்டுள்ளான். இன்ஸான் இறைவனின் இரகசியமாகவும், இறைவன் இன்ஸானின் ரகசியமாகவும் இருக்கிறான் என்பதையும் இன்ஸான், இறைவனின் கலீபாவாகவே தோற்றுவிக்கப்பட்டான் என்பதையும் இந்நூல் படிப்பவர்கள் விளங்கிக் கொண்டால் இந்நூல் எழுதியதன் பலனை நான் பெற்றுக் கொண்டவனாவேன்.

எந்நோக்கத்திற்காக இந்நூல் எழுதப்பட்டதோ அதன் பயனை வாசகர்கள் அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்தவனாய் இம்முகவுரையை முடிக்கிறேன்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

இங்ஙனம்,

**பூஅலி முஹம்மது யாஸீன் ஆலிம் சாஹிப்**

கலீபத்துல் பாஸியத்துஷ் ஷாதுலி வல் காதிரி வனக்ஷபந்தி,

33, 57 கலுங்கு சின்ன முகைதீன் தெரு, மேலப்பாளையம்,

திருநெல்வேலி – 5 தமிழ்நாடு

بسم الله الرّحمٰن الرّحيم.

## அத்தியாயம் 1

### கடவுளைப் பற்றிய சிந்தனை

நம் முன்னோர்கள், மனிதர்களுக்கு ஏற்படும் இன்பத்தையும், துன்பத்தையும் மனிதர்கள் சித்தம்போல் எதுவும் நடைபெறாததையும், மனிதர்களுக்கு ஏற்படும் இயலாத்தனத்தையும் ஒவ்வொரு வஸ்துக்களும் உலகில் தோன்றி, நிலைமாறி பின் அழிவதையும், மனிதன் கருவுற்றதிலிருந்து தான் கிழப்பருவம் எய்தும்வரை தன் உரு மாறி வருவதையும், மரணிப்பதையும் கவனித்து

இவையெல்லாம் தானே உண்டாகித் தானே அழிகின்றதா அல்லது இவற்றையெல்லாம் ஆட்டிப் படைக்கும் வஸ்து ஒன்று இருக்கின்றதா? என்று யோசிக்கும் போது அவர்களில் ஒரு சாரார் இப்பிரபஞ்சத்தை படைத்து, காத்து, அழிப்பது இறைசக்தியே என்ற முடிவிற்கும், மறுசாரார் இப்பிரபஞ்ச வஸ்துக்கள் இயற்கையாகவே தோன்றி பின் அழிகின்றன.

இவற்றைப் படைக்கும் இறைவன் இல்லை என்ற முடிவிற்கும் வந்தார்கள். இறைவன் உண்டு என்பவர்கள் ஆஸ்திகர்கள் என்றும்,

இறைவன் இல்லை என்பவர்கள் நாஸ்திகர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

பிரத்தியட்சம், யூகம், அனுபவ வாக்கு இந்த மூன்று ஆதாரங்களையும் வைத்து இறைவன் உண்டென்ற முடிவிற்கு வந்தவர்கள் ஆஸ்திகர்கள். பிரத்தியட்சம் ஒன்றை மட்டுமே ஆதாரமாக வைத்து கடவுள் இல்லை என்ற முடிவிற்கு வந்தவர்கள் நாஸ்திகர்கள்.

இவ்விரு தரப்பு கொள்கைகளையும் ஆராயுமுன் பிரத்தியட்சம், யூகம், அனுபவ வாக்கு என்பவை என்ன என்று கவனிப்போம். ஒரு வஸ்து எதார்த்தத்தில் இருக்கிறதா? இல்லையா? என்பதை ஆதாரப்பூர்வமாக அறிகிறோம் அப்படித் தெரிவதற்கு ஆதாரம் மூன்று.

நமது ஐம்புலன்களால் உணர்வது ஓர் ஆதாரம். நமக்கு முன்னால் நெருப்பு எரிந்தால் அதைக் கண்களால் பார்க்கிறோம். அதன் ஒளியைக் காண்கிறோம். கையால் தொட்டால் சுடுவதை உணர்கிறோம். இப்படி நமது புலன்களுக்குத் தட்டுப்படுவதால் இதைக் கொண்டு நெருப்பு எரிவரை ஒப்புக் கொள்கிறோம். இந்த ஆதாரத்திற்குப் பிரத்தியட்சம் என்று பெயர்.

தூரத்தில் ஓரிடத்தில் புகை மட்டும் நம் கண்களுக்கு தெரிகிறதென்று வைத்துக் கொள்வோம். கண்களால் நெருப்பைப் பார்க்க முடிவதில்லை. புகை வருவதைக் கொண்டு நெருப்பு அங்கிருப்பதை உணர்கிறோம். இவ்விதம் அறிவரை யூகம் என்று சொல்கிறோம்.

இரவில், வெகு தொலைவில், ஒரு மலையில் வெளிச்சம் தெரிகிறது. என்ன வெளிச்சம் அது என்பதை அறியவும் முடியவில்லை. யூகிக்கவும் முடியவில்லை. இதைப் பற்றிய விபரம் அறிந்த ஒரு அனுபவசாலி சொல்கிறார்: மலைவாசிகள் மலைக்காட்டில் தீ வைக்கிறார்கள். அதுதான் இவ்வளவு தூரத்திலிருக்கும் நமக்கு ஒளியமயமாகத் தெரிகிறது என்கிறார். அவர் சொல்லை ஆதாரமாக வைத்து நெருப்பை பற்றி அறிகிறோம். இதற்கு அனுபவாக்கு அல்லது ஆப்த வாக்கியம் எனப் பெயர்.

பிரத்தியட்சம், யூகம், அனுபவ வாக்கு என்பவைகளை முறையே சுருதி, யுக்தி, பிரமாணம் என்றும் சொல்லலாம்.

கடவுள் பித்தியட்சமாகத் தெரியாதபடியால் சுருதி, யுக்தி, பிரமாணம் என்ற மூன்றையும் ஆதாரமாக வைத்து கடவுள் உண்டென்ற முடிவுக்கு வந்தவர்கள் ஆஸ்திகர்கள். கடவுள் உண்டென்பதற்கு யூகம், அனுபவாக்கு இரண்டையும் நாஸ்திகர்கள் ஒப்புக் கொள்வதில்லை. பிரத்தியட்சம் ஒன்றையே ஆதாரமாக எடுத்துக் கொள்கிறார்கள். உலகின் ஒவ்வொரு வஸ்துவும் பிரத்தியட்சமாகத் தெரிவதுபோல் கடவுளும் பிரத்தியட்சமாகத் தெரிவதில்லை. எனவே கடவுள் என்பது கற்பனையே என்பது நாஸ்திகர்களின் வாதம்.

மேலும் அவர்கள் கூறும் விளக்கமாவது: இவ்வுலகம் மண், தண்ணீர், காற்று, நெருப்பு என்ற நான்கு மூலப் பொருட்களால் உண்டாகிறது. இவை நான்கும் ஒன்றாகச் சேர்வதும் பிரிவதும் அவற்றின் இயல்பு. இவை நான்கும் சேரும்போது பிரபஞ்சப் பொருட்கள் ஏற்பட்டு அவைகளில் உணர்வுகள் உண்டாகின்றன. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இம்மூன்றும் வாயில் சுவைக்கப்படும்போது சிவப்பு நிறம் ஏற்படுவது போல் சதுர்ப் பூதங்களின் சேர்க்கையால் உணர்வுகள் உண்டாகின்றன.

இப்பிரபஞ்சத்தைப் படைத்தவன் இறைவன் என்றால் அவனைப் படைக்க ஒருவன் தேவைப்படும். சிந்தனையை ஏற்படுத்தவும் இறைவன் தேவ‌யில்லை. ஜீரணச் சுரப்பிகள் ஜீரண நீரைச் சுரப்பது போல மூளை சிந்தனையைச் சுரக்கின்றது. இயற்கையின் இயல்புகள் மாறுவதில்லை. ஆண், பெண் சேர்க்கையில் கரு உருவாவதும், நெருப்பு சுடுவதும், கத்தி வெட்டுவதும் இயற்கையின் இயல்பு என்பது நாஸ்திகர்களின் கொள்கை.

ஆனால் இயற்கைக்கு மாற்றமாக எத்தனையோ சம்பவம் வரலாறுகளில் நடந்திருப்பதை அனுபவ வாக்கு மூலம் கேட்டறிந்த ஆஸ்திகர்கள் நாஸ்திக வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பிரத்தியட்சம், யூகம், அனுபவாக்கு அதாவது சுருதி, யுக்தி, பிரமாணம் இம்மூன்றையும் ஆதாரமாகக் கொண்டு இறைவன் உண்டு என்ற முடிவிற்கு ஆஸ்திகர்கள் வந்தனர்.

எல்லாம் இயற்கைப்படியே நடக்கும் என்பது சரியல்ல. இறைவன் நாடினால் இயற்கையையும் மாற்ற முடியும். சர்வசக்தன் இறைவனென்று மக்களுக்கு போதித்த நபிமார்கள் இயற்கைக்கு மாற்றமாக பல அற்புதங்களை நிகழ்த்தியிருப்பதை சுட்டிக் காண்பித்தார்கள்.

ஆண்-பெண் சேர்க்கையில்தான் கருவுண்டாகும் என்ற இயற்கை விதிக்கு மாற்றமாக ஆண் பெண் இல்லாமலேயே இறைவன் ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களை வெளிப்படுத்தினான்.

ஆணை மட்டும் வைத்து ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களை வெளிப்படுத்தினான்.

பெண்ணை மட்டும் அதாவது மரியம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மட்டும் வைத்து (ஈஸா) அலைஹிஸ்ஸலாம் அவர்களை வெளிப்படுத்தினான்.

வயோதிகத்தில் கருத்தரிக்க முடியாதென்ற இயற்கை விதிக்கு மாற்றமாக ஜகரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வயோதிகமான மனைவி மூலம் யஹ்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களை வெளிப்படுத்தினான்.

நெருப்பு சுடுமென்ற இயற்கை விதிக்கு மாற்றமாக நம்ரூத், நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நெருப்பில் தள்ளியபோது அந்நெருப்பு நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை சுடாமல் பாதுகாத்தான். இப்றாஹீம் நபி தம் திருமகனாரை இறைவனுக்குப் பலியிட கத்தி கொண்டு அறுக்கும்போது கத்தி அறுக்குமென்ற இயற்கையின் விதியை இறைவன் செயல்படாமல் ஆக்கிவிட்டான்.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், அவர்களின் கூட்டத்தாரையும் பிர்அவ்னின்றும் காப்பாற்ற இயற்கைக்கு மாற்றமாக இறைவன் கடலையே பிளக்கச் செய்தான். இதையெல்லாம் ஆராய்ந்த ஆஸ்திகர்கள் பிரத்தியட்சமாய் இறைவனை காணாவிடினும் யூகம், அனுபவ வாக்கு மூலம் இறைவன் உண்டு என்பதை ஒப்புக் கொண்டார்கள்.

பிரபஞ்சங்களைப் படைத்துப் பரிபாலிக்கும் இறைவன் எங்கே இருக்கிறான்? அவனை எப்படி வணங்குவது? என்பதை யூகம், அனுபவ வாக்கு மூலமாய் ஆஸ்திகர்கள் ஆராயத் தொடங்கினார்கள்.

பிரபஞ்சங்கள் அழிவதால் பிரபஞ்சங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் இறைவன் என்றும், அவன் என்றும் அழியாதவன் என்றும் முடிவு செய்து இறைவன் பிரத்தியட்சமாகத் தெரியாததால் இறைவனைச் சிலர் மனதில் உருவகப்படுத்தியும், சிலர் அரூபத்தில் கட்டுப்படுத்தியும், வேறு சிலர் சில குறிப்பிட்ட சொரூபங்களில் இறைவனை உருவகப்படுத்தியும் வணங்கினார்கள்.

சிலர் கிரகங்களையும், சிலர் சதுர்பூதங்களையும் வணங்கினர். இன்னும் சிலர் இறைவனது பண்புகளில் நன்மை செய்பவை, தீமை செய்பவை என்று இரண்டாகப் பிரித்து ஒவ்வொரு பண்புக்கும் உருவகம் கொடுத்து நன்மை செய்யும் பண்புகளை நன்மை செய்யும்படியாகவும், தீமை செய்யும் பண்புகளை தீமை செய்யாதிருக்கும் படியாகவும் வேண்டிக் கொண்டு வணங்கினர்.

இறைவனிடம் தாங்கள் நேரில் கேட்பதை விட சிபாரிசுத் தெய்வங்கள் மூலம் கேட்பதில் அதிக பலன் கிடைக்குமென்று நம்பி அநேக சிபாரிசு தெய்வங்களை ஏற்படுத்தி அச்சிபாரிசுத் தொய்வங்கள் மூலம் இறைவனிடம் தங்கள் வேண்டுதல்களை ஆஸ்திகர்கள் வேண்டினர்.

கடவுள் எங்குமிருக்கிறான். ஆனால் நமக்கு அவன் பிரத்தியட்சமாகத் தெரிவதில்லை என்றால் அவன் எல்லா வஸ்துக்களிலும் இருந்துதானே ஆக வேண்டும். ஆகையால் கல்லை வணங்கினால் என்ன? செம்மை வணங்கினால் என்ன? அதில் இறைவன் இருப்பது உண்மைதானே என்று சிலைகளில் கடவுளை உருவகப்படுத்தில் ஒருசாரார் கடவுளை வணங்க ஆரம்பித்தார்கள். சிலை அமைத்து கடவுளை ஏன் வணங்க வேண்டும்? அவன் எங்கும் நிறைந்தவனாயிற்றே என்று சிலை வணக்கக்காரர்களிடம் கேட்டால் அதற்கு அவர்கள் சொன்ன சமாதானமாவது:

கடவுள் எங்கும் நிறைந்தவன் என்பது உண்மைதான். எங்கும் நிறைந்த அவன் எவ்வுருவில் இருக்கிறான் என்பதை எங்கள் மனதால் திட்டப்படுத்த முடிவதில்லை. எனவே, எங்கள் மனப்பக்குவத்திற்குத் தக்கபடி கடவுளை உருவகப்படுத்தி வணங்கினால் தான் எங்கள் இறைவணக்கம் நிறைவணக்கமாகிறது.

இல்லையென்றால், எங்கள் மனம் இறைவணக்கத்தில் ஒன்றிக்காமல் பல எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது. இதனால் எங்களால் மனதை ஒன்றுபடுத்தி வணங்க முடியவில்லை. இறைவனை ஏதாவது ஒரு உருவத்தில் தரிபடுத்தி அவ்வுருவத்தை நோக்கி வணங்கினால்தான் எங்கள் எண்ணம் சிதறாமல் வணங்க முடிகிறது.

அதனால்தான் எங்கள் மனம் மரியாதை கொடுக்கும் ரூபத்தில் கடவுளின் உருவத்தை அமைத்து அந்த உருவத்தை நோக்கி வணங்குகிறோம் என்றார்கள்.

மனிதனது சுட்டறிவு ஓர் எல்லைக்கு உட்பட்டது. எல்லைக்கு உட்பட்ட சுட்டறிவைக் கொண்டு எல்லையற்ற இறைவனை அறிய முடியாது. ஏனென்றால் எல்லையற்ற இறைவனை அறிவதற்கு மனிதனது சுட்டறிவிற்கு சம்பூரணமில்லை.

அதனால் தான் ஷரியத்தானது இறைவனைப் பற்றிய விசாரணையை சுட்டறிவு கொண்டு விசாரணை செய்வதை தடை செய்கிறது. நீங்கள் அதில் ஆராய்தல் செய்யாதீர்கள் என்றும் திடனாக அவன் மகிமையை அறிய மாட்டீர்களென்றும் சொல்லப்படுகிறது. அவனது ஜலாலியத் என்ற மகிமையை அறிய சிரமமாயிருப்பது அவனது ஜலாலிய்யத் மகத்துவம் மறைந்திருப்பதினால் அல்ல.மனிதர்கள் அவனது ஜலாலிய்யத்தை சுட்டறிவு மூலம் தெரிசிக்க பலமற்றவர்களாயிருக்கிறார்கள்.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனை தெரிசிக்க நாடியபோது '**நீர் பார்க்க திராணி பெற மாட்டீர்**' என்று இறைவன் நபி மூசாவை நோக்கிச் சொன்னது இதுபற்றியே ஆகும்.

மீண்டும் மூஸா நபி அவர்கள் இறைவனிடம் வற்புறுத்தியபோது ஒரு ஊசித் துவாரத்தின் அளவு அவனது தஜல்லியத்தைக் காட்டியபோது நபி மூஸா அவர்கள் பார்க்கத் திராணியற்று நப்ஸ் என்னும் மூஸா அடித்து வீழ்ந்தார்கள்.

நான் எனது என்ற இரு சுவட்டையும் கழற்றிய பின்பே மூசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவன் தஜல்லியைத் தெரிசித்தார்கள்.

மனிதனது சுட்டறிவு கொண்டு இறைவனை அறிய ஆராய ஆரம்பித்தால் அவன் சுட்டறிவுக்குத் தக்கபடிதான் இறைவனை அறிய முடியும். நாம் பேசுவதற்கும், பார்ப்பதற்கும், கேட்பதற்கும் வாய், கண், காது எப்படி அவசியமோ

அப்படியே இறைவனுக்கும் அவன் பார்ப்பதற்கும், பேசுவதற்கும், கேட்பதற்கும் இவ்வுறுப்புகள் அவசியம் வேண்டும். ஆகையால் இறைவன் கை, கால், தலை, உடல் முதலிய உறுப்புகள் உள்ள மனிதனாகத்தான் இருக்க முடியும்.

அப்படி இருந்தால் தான் அவன் படைத்த பிரபஞ்சங்களை பரிபாலிக்க முடியும் என்று நினைக்க முடியும். மனிதன் சிந்திப்பது போல் ஒரு ஈக்கும் புத்தியிருந்து அதுவும் தன்னைப் படைத்த இறைவன் தன் உருவைப் போல் தான் இருக்க முடியம் என்று யோசிக்கும். இம்மாதிரி மனிதன் யோசித்துதான் கடவுளை உருவகப்படுத்தி வணங்க ஆரம்பித்தான். அத்தோடு மட்டும் மனிதன் நிற்கவில்லை.

தங்களது மூதாதையர்களில் மதிப்புக்குரியவர்களையும் அவர்களது தோற்றத்தை உருவத்தில் அமைத்து வழிபடத் தலைப்பட்டான். இவ்விதம் வந்தது தான் உருவ வழிபாடு.

இறைவன் எம்மாதிரி இருக்கிறான் என்பதை அவன் படைத்த சிருஷ்டியில் ஆராய முடியாது. ஏனென்றால் அவன் படைத்த படைப்புக்களில் எந்த மாதிரிக்குள்ளும் அவனை மட்டுப்படுத்த முடியாது. படைப்புகளில் வைத்து ஆராய ஆரம்பித்தால் இறைவனை படைப்புகளில் எதிர்மறையாக கூறலாமே தவிர அவனை இன்ன படைப்பு மாதிரி என்று கூற முடியாது. அதுமாதிரி நாயன் அல்ல. இதுமாதிரி நாயன் அல்ல என்று கூறலாமே தவிர இறைவனை அவன் படைத்த படைப்பில் எந்த மாதிரிக்கும் ஒப்பிட முடியாது.

ஏக இறைவன் எல்லைக்கு அப்பாற்பட்டவன். நமது மனம் ஒரு எல்லைக்கு உட்பட்டது. எல்லைக்கு உட்பட்ட மனதைக் கொண்டு எல்லைக்கு அப்பாற்பட்ட இறைவனை அறிந்து கொள்ள முடியாது. ஆகையால் இறைவனை எந்த உருவத்திலும் உருவகப்படுத்தி வணங்க முடியாது. வணங்கவும் கூடாது. பூரண ஞானிகள் ஏக இறைவனை சிலையில் கட்டுப்படுத்தி வணங்குவதை ஏற்றுக் கொள்ளவில்லை.

உனக்கு அந்நியமாய் இறைவனில்லை. இறைவனுக்கு அந்நியமாய் நீ இல்லை. எனவே இறைவனைத் தேடு. உன்னிலே தேடு. உனக்கு அந்நியமாய் இறைவனைத் தேடாதே என்ற உண்மைத் தத்துவத்தை கீழ்க்கண்ட சித்தர் பாடல் தெளிவுபடுத்துகிறது.

'நட்ட கல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாற்றியே

சுற்றிவந்து மொண மொணன்று சொல்லும் மந்திரம் ஏதடா?

நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்

சுட்ட சட்டி சட்டுவங்கள் கறிச்சுவை அறியுமோ?

செங்கல்லும் கருங்கல்லும் சிவந்த ஜாதி லிங்கமும்

செம்பிலும் துராவிலும் சிவனிருப்பர் னென்கிறீர்

உம்பதம் அறிந்து உம்மை நீர் அறிந்தபின்

அம்பலம் நிறைந்த நாதர் ஆடல் பாடல் ஆகுமோ?

ஓசை பெற்ற கல்லை உடைத்து உருக்கிச் செய்கிறீர்

வாசலில் பதித்த கல்லை மழுங்கவும் மிதிக்கிறீர்

பூசை பெற்ற கல்லிலே பூவும் நீரும் சாற்றுரீர்

ஈசனுக்கு உகந்த கல்லு இரண்டு கல்லுமல்லவே

பூசை பூசை என்று சொல்லி பூசை செய்யும் பேதைகாள்

பூசை பூசை என்கிறீர் பூசை கொடைதெவ்விடம்

ஆதி பூசை கொண்டதோ அனாதி பூசை கொண்டதோ

ஏது பூசை கொண்டதோ இன்னதென் றியம்புமே'

இறைவனது சிருஷ்டியின் புதுமையைக் கொண்டு அவன் வல்லமையை ஆராய்ந்து பார்க்கலாமே தவிர அவன் படைத்த சிருஷ்டியில் அவனை எதிலும் கட்டுப்படுத்த முடியாது. இறைவன் தன் வல்லமையை அவன் படைத்த சிருஷ்டியின் மாறலாகத் தெளிவுபடுத்துவதை நாம் விளங்கிக் கொள்ள அவன் சொன்ன தெய்வ வசனங்களில் சிலதை இங்கே குறிப்பிடுகிறோம்.

وَاللَّهُ أَنزَلَ مِنَ السَّمَاءِ مَاءً فَأَحْيَا بِهِ الْأَرْضَ بَعْدَ مَوْتِهَا ۚ إِنَّ فِي ذَٰلِكَ لَآيَةً لِّقَوْمٍ يَسْمَعُونَ

குர்ஆன் 16-65 "இன்னும் அல்லாஹ் வானத்திலிருந்து மழையைப் பொழிய வைத்து அதைக் கொண்டு உயிரிழந்த பூமியை உயிர் பெறச் செய்கிறான். நிச்சயமாக செவியேற்கும் மக்களுக்கு இதில் (தக்க) அத்தாட்சி இருக்கிறது"

وَإِنَّ لَكُمْ فِي الْأَنْعَامِ لَعِبْرَةً ۖ نُّسْقِيكُم مِّمَّا فِي بُطُونِهِ مِن بَيْنِ فَرْثٍ وَدَمٍ لَّبَنًا خَالِصًا سَائِغًا لِّلشَّارِبِينَ

16-66 “நிச்சயமாக உங்களுக்கு (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) கால்நடைகளிலும் (தக்க) படிப்பினை இருக்கிறது. அவற்றின் வயிற்றிலுள்ள சாணத்திற்கும், இரத்தத்திற்குமிடையிலிருந்து கலப்பற்ற பாலை அருந்துபவர்களுக்கு இனிமையானதாக (தாராளமாகப்) புகட்டுகிறோம்.“

أَلَمْ يَرَوْا إِلَى الطَّيْرِ مُسَخَّرَاتٍ فِي جَوِّ السَّمَاءِ مَا يُمْسِكُهُنَّ إِلَّا اللَّهُ ۗ إِنَّ فِي ذَٰلِكَ لَآيَاتٍ لِّقَوْمٍ يُؤْمِنُونَ

16-79 “வான (மண்டல)த்தின் (காற்று) வெளியில் (இறை கட்டளைக்குக்) கட்டுப்பட்டுப் பறக்கும் பறவைகளை இவர்கள் பார்க்கவில்லையா? அவற்றை (ஆகாயத்தில்) தாங்கி நிற்பவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமிலர். நிச்சயமாக இதில் ஈமான் கொண்ட மக்களுக்கு (த்தக்க) அத்தாட்சி இருக்கின்றன“.

قُلْ أَرَأَيْتُمْ إِن جَعَلَ اللَّهُ عَلَيْكُمُ اللَّيْلَ سَرْمَدًا إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ مَنْ إِلَٰهٌ غَيْرُ اللَّهِ يَأْتِيكُم بِضِيَاءٍ ۖ أَفَلَا تَسْمَعُونَ. قُلْ أَرَأَيْتُمْ
إِن جَعَلَ اللَّهُ عَلَيْكُمُ النَّهَارَ سَرْمَدًا إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ مَنْ إِلَٰهٌ غَيْرُ اللَّهِ يَأْتِيكُم بِلَيْلٍ تَسْكُنُونَ فِيهِ ۖ أَفَلَا تُبْصِرُونَ. وَمِن
رَّحْمَتِهِ جَعَلَ لَكُمُ اللَّيْلَ وَالنَّهَارَ لِتَسْكُنُوا فِيهِ وَلِتَبْتَغُوا مِن فَضْلِهِ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ.

28-71 முதல் 73 வரை “(நபியே!) நீர் கூறுவீராக! கியாமநாள் வரை அல்லாஹ் உங்கள் மீது இரவை நிரந்தரமாக இருக்கச் செய்துவிட்டால், உங்களுக்கு(ப் பகலின்) வெளிச்சத்தைக் கொண்டு வரக்கூடியவன் அல்லாஹ்வையன்றி நாயன் உண்டா என்பதை நீங்கள் (சிந்தித்துப்) செவியேற்க வேண்டாமா? “கியாமநாள் வரை உங்கள் மீது அல்லாஹ் பகலை நிரந்தரமாக இருக்கும்படிச் செய்து விட்டால் நீங்கள், அதில் ஓய்வு பெறும் பொருட்டு உங்களுக்கு இரவைக் கொண்டு வரக்கூடியவன் அல்லாஹ்வையன்றி நாயன் உண்டா என்பதை நீங்கள் (சிந்தித்துப்) பார்த்தீர்களா? (இவ்வுண்மையை) நீங்கள் நோக்க வேண்டாமா?“

“இன்னும் அவன் தன் ரஹ்மத்தினால் உங்களுக்கு இரவையும் பகலையும் உண்டாக்கினான். (இரவு) நீங்கள் அதில் ஓய்வு பெறும் பொருட்டு(பகல்) நீங்கள் அதில் அருளைத் தேடும்பொருட்டும்(உண்டாக்கினான்) (இதற்காக அவனுக்கு) நன்றி செலுத்துவீர்களாக! மேற்சொன்ன வசனங்கள் மூலம் தன் வல்லமையை தெளிவுபடுத்திய இறைவன் தான் யார் என்பதைக் குர்ஆனில் பின்வருமாறு விவரிக்கிறான்.

قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ. اللَّهُ الصَّمَدُ. لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ. وَلَمْ يَكُن لَّهُ كُفُوًا أَحَدٌ .

குர்ஆன் 112:1 முதல் 4 "(நபியே!) நீர் கூறுவீராக! அல்லாஹ் அவன் ஏகன். அல்லாஹ் (எவரிடத்திலும் தேவையற்றவன். அவன் (எவரையும்) பெறவுமில்லை. (எவராலும்) பெறப்படவுமில்லை. அன்றியும் அவனுக்கு நிகராக எவருமில்லை."

اَللّٰهُ لَآ إِلٰهَ إِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّومُ ۚ لَا تَأْخُذُهُ سِنَةٌ وَلَا نَوْمٌ ۚ لَّهُ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ ۗ مَن ذَا الَّذِي يَشْفَعُ عِندَهُ إِلَّا

بِإِذْنِهِ ۚ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ ۖ وَلَا يُحِيطُونَ بِشَيْءٍ مِّنْ عِلْمِهِ إِلَّا بِمَا شَاءَ ۚ وَسِعَ كُرْسِيُّهُ السَّمَاوَاتِ

وَالْأَرْضَ ۖ وَلَا يَئُودُهُ حِفْظُهُمَا ۚ وَهُوَ الْعَلِيُّ الْعَظِيمُ

குர்ஆன் 2:255 "அல்லாஹ் அவனைத் தவிர(வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை. அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன். என்றென்றும் நிலைத்திருப்பவன். அவனை அறிதுயிலோ, உறக்கமோ பீடிக்காது. வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன. அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? படைப்பினங்களுக்கு முன்னர் உள்ளவற்றையும் அவற்றிற்கு பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவன் ஞானத்திலிருந்து எதனையும் அவன் நாட்டமின்றி எவரும் அறிந்து கொள்ள முடியாது. அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும் பூமியிலும் பரந்து நிற்கிறது. அவ்விரண்டையும் காப்பது அவனுக்கு சிரமத்தை உண்டாக்குவதில்லை. அவன் மிக உயர்ந்தவன். மகிமை மிக்கவன்."

هُوَ اللّٰهُ الَّذِي لَا إِلٰهَ إِلَّا هُوَ ۖ عَالِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ ۖ هُوَ الرَّحْمٰنُ الرَّحِيمُ

59:22 " அவனே அல்லாஹ். வணக்கத்திற்குரியவன். அவனைத் தவிர வேறு நாயனில்லை. மறைவானதையும், பகிரங்கமானதையும் அறிபவன். அவனே அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன்".

هُوَ اللّٰهُ الَّذِي لَا إِلٰهَ إِلَّا هُوَ الْمَلِكُ الْقُدُّوسُ السَّلَامُ الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ الْعَزِيزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ ۚ سُبْحَانَ اللّٰهِ عَمَّا يُشْرِكُونَ

59: 23 "அவனே அல்லாஹ். வணக்கத்திற்குரிய நாயன். அவனைத் தவிர வேறு யாருமில்லை. அவனே பேரரசன். மிகப் பரிசுத்தமானவன். சாந்தியளிப்பவன். தஞ்சமளிப்பவன். பாதுகாவலன். (யாரையும்) மிகைப்பவன். அடக்கியாழ்பவன். பெருமைக்குரித்தானவன். அவர்கள் இணை வைப்பவற்றை எல்லாம் விட்டும் அல்லாஹ் மிகத் தூய்மையானவன்."

هُوَ اللّٰهُ الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ ۖ لَهُ الْأَسْمَاءُ الْحُسْنَىٰ ۚ يُسَبِّحُ لَهُ مَا فِي السَّمَاوَاتِ وَالْأَرْضِ ۖ وَهُوَ الْعَزِيزُ الْحَكِيمُ

59-24 " அவன்தான் அல்லாஹ். படைப்பவன். ஒழுங்குபடுத்தில் உண்டாக்குபவன். உருவமளிப்பவன். அவனுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன. வானங்களிலும்

www.sufimanzil.org

பூமியிலும் உள்ளவை யாவும் அவனையே தஸ்பீஹு(செய்து துதி) செய்கின்றன. அவனே(யாரையும்) மிகைத்தவன். ஞானமிக்கவன்.“

أَلَمْ تَعْلَمْ أَنَّ اللَّهَ لَهُ مُلْكُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ ۗ وَمَا لَكُم مِّن دُونِ اللَّهِ مِن وَلِيٍّ وَلَا نَصِيرٍ

2:107 “நிச்சயமாக அல்லாஹ்வின் ஆட்சி வானங்களிலும் பூமியிலும் உள்ளது. அவனைத் தவிர உங்களுக்குப் பாதுகாவலனோ, துணை செய்பவனோ வேறு எவருமில்லை. இதை நீங்கள் அறியவில்லையா?“

إِنَّ الَّذِينَ قَالُوا رَبُّنَا اللَّهُ ثُمَّ اسْتَقَامُوا فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ

46:13 “நிச்சயமாக எங்கள் ரப்பு அல்லாஹ்வே“ என்று கூறி, பிறகு அதிலேயே நிலைத்து நிற்கிறார்களே அவர்களுக்குப் பயமில்லை. அவர்கள் துக்கப்படவுமாட்டார்கள்.“

அல்லாஹ்விற்கு இணை வைத்துச் சிலையை வணங்காதீர்கள். அவனைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறு யாருமில்லை. சிபாரிசுத் தெய்வங்கள் என்பதுமில்லை. இணை வைத்து வணங்குவது பெரிய பாவம். அதை அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான் என்பதை அல்லாஹ் குர்ஆனில் திட்டப்படுத்திக் கூறியுள்ளான்.

إِنَّ الَّذِينَ قَالُوا رَبُّنَا اللَّهُ ثُمَّ اسْتَقَامُوا فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ

4:48 “நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான். இதைத் தவிர (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். யார் அல்லாஹ்விற்கு இணை வைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள்.?“

إِنَّ اللَّهَ لَا يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَاءُ ۚ وَمَن يُشْرِكْ بِاللَّهِ فَقَدْ ضَلَّ ضَلَالًا بَعِيدًا

4:116 “நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கவே மாட்டான். ஆனால் இது அல்லாத (பாவத்)தை தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கிறானோ அவன் நிச்சயமாக வெகுதூரமான வழிகேட்டில் ஆகிவிட்டான்“

இணை வைத்து வணங்க வேண்டாமென்று நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களுக்குப் போதித்தபோது, இணை வைப்பவர்கள், நாங்கள் வணங்கும் இவ்வணக்கம் நாங்கள் புதிதாக ஏற்படுத்திக் கொண்டதல்ல. எங்கள் முன்னோர்கள் இவ்விதமே வணங்கினார்கள் என்றும், நாங்களும் எங்கள் முன்னோர்கள் வணங்கியதையே பின்பற்றி வணங்குகிறோம் என்று சொன்னார்கள். உங்கள் முன்னோர்கள் வழிகேட்டிலிருந்தாலுமா நீங்கள் அதைப் பின்பற்றுவீர்கள் என்று அல்லாஹ் திருமறை மூலம் நபிக்கு அறிவித்தான். “நான் உங்களுக்குப் போதிக்கும் ஏக தெய்வக் கொள்கைப் புதிதானதல்ல. எனக்கு முன் வந்த நபிமார்களும் இதே கொள்கையைத்தான் உங்கள் முன்னோர்களுக்குப் போதித்தார்கள்.

அதை யார் உங்கள் முன்னோர்களில் பின்பற்றினார்களோ அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடையைப் பெற்றனர். உங்கள் முன்னோர்களில் யார் அந்தக் கொள்கையை மறுத்தார்களோ அவர்கள் இறை சாபத்திற்கு ஆளாகினர்“ என்று நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

இவ்விபரங்களை அல்லாஹ் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அவன் இறக்கிய திருமறை மூலம் விபரமாக அறிவித்துள்ளான். அதன் விபரமாவது:

அல்லாஹ்விற்கு இணையாக அல்லாஹ் அல்லாத்ததை வணங்காதீர்கள். ஏகநாயன் அல்லாஹ் ஒருவனே. அவனையே வணங்குங்கள். இது அல்லாஹ்வின் கட்டளை என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர் காலத்திய மக்களுக்குப் போதித்தார்.

நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் போதனையை ஏற்றுக் கொள்ளாத மக்களை அல்லாஹ் வெள்ளப்பிரளயத்தில் மூழ்கடித்தான்.

இதே ஏக தெய்வக் கொள்கையை ஆது கூட்டத்தாருக்கு நபி ஹூது அலைஹிஸ்ஸலாம் போதித்தார்கள். இதனை ஏற்காத ஆது கூட்டத்தாரை அல்லாஹ் அழித்து விட்டான்.

இதே ஏக தெய்வக் கொள்கையை தமூது கூட்டத்தாருக்கு நபி ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம் போதித்தார்கள். இதனை ஏற்றுக் கொள்ளாத தமூது கூட்டத்தினரை அல்லாஹ் பூகம்பம் மூலம் அழித்து விட்டான்.

இதே ஏகதெய்வக் கொள்கையை நபி லூத் அலைஹிஸ்ஸலாம் அவர் கால மக்களுக்கு போதித்தார்கள். அவர் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத அவர் காலத்திய மக்களை அல்லாஹ் கல்மாரி பொழிந்து அழித்து விட்டான்.

இதே கொள்கையை மத்யன்வாசிகளுக்கு நபி ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் போதித்தார்கள். அதனை நிராகரித்த மத்யன் வாசிகளை அல்லாஹ் பூகம்பத்தின் மூலம் அழித்து விட்டான்.

இதே ஏக தெய்வக் கொள்கைகளை பனூஇஸ்ராயீல் கூட்டத்தாருக்கு நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் போதித்தார்கள். இக்கொள்கையை நிராகரித்த பனூ இஸ்ராயீல் கூட்டத்தார்கள் காளை கன்றை இணைவைத்து வணங்கினார்கள்.

ஏகக் கொள்கையை நிராகரித்த பனூ இஸ்ராயீல் கூட்டத்தார் பிர்அவ்னைப் பின்பற்றி மூஸா அலைஹிஸ்ஸலாம் போதனையை ஏற்க மறுத்தனர். அவ்விதம் எதிர்த்த பிர்அவ்னையும் அவன் கூட்டத்தாரையும் அல்லாஹ் கடலில் மூழ்கடித்தான்.

நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், அவர்களது தாயார் மரியம் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் கிறித்துவர்கள் இரண்டு தெய்வங்களாக்கி வணங்கியதை இறைவன் தன் திருமறையில் கண்டித்துள்ளான். இதே சமயத்தில் ஏக தெய்வக் கொள்கைக்குப் பாடுபட்ட நபிமார்களையும், அவர்களைப் பின்பற்றிய கூட்டத்தினரையும் அல்லாஹ் தன் அருட்கொடை மூலம் பாதுகாத்தான்.

நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் அவர்களைப் பின்பற்றிய கூட்டத்தினரையும் அல்லாஹ் கப்பலில் ஏற்றி வெள்ளப் பிரளயத்தை விட்டும் காப்பாற்றினான்.

நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் போதித்த ஏக தெய்வக் கொள்கையை ஏற்காத நம்ரூத் நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நெருப்புக் குண்டத்தில் தள்ளியபோது அந்நெருப்பு அவர்களை சிறிதும் தீண்டாமல் அல்லாஹ் நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் காப்பாற்றினான்.

நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பின்பற்றிய கூட்டத்தினரையும் கடலைப் பிளக்கச் செய்து அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றினான். ஏக தெய்வக் கொள்கையைப் போதித்த நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை எதிரிகள் சிலுவையிலறைய முயற்சித்தபோது அல்லாஹ் அவர்களை தன்னளவில் உயர்த்திக் கொண்டான்.

இவ்வரலாறுகளை அல்லாஹ் தனக்கு அறிவித்திருப்பதாக நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களுக்குப் போதித்து அல்லாஹ் இறக்கி வைத்த திருக்குர்ஆன் மீது ஈமான் கொள்ளுங்கள் என்று அக்கால மக்களிடம் சொல்லும்போது,

அம்மக்கள் எங்கள் மீது இறக்கப்பட்டதின் மீதுதான் நம்பிக்கை கொள்வோம். நீர் சொல்லும் வேதம் கட்டுக்கரை. அதை நாங்கள் ஏற்கமாட்டோமென்றார்கள். அல்லாஹ் திருக்குர்ஆன் மகிமைப் பற்றி குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்.

لَوْ أَنزَلْنَا هَٰذَا الْقُرْآنَ عَلَىٰ جَبَلٍ لَّرَأَيْتَهُ خَاشِعًا مُّتَصَدِّعًا مِّنْ خَشْيَةِ اللَّهِ ۚ وَتِلْكَ الْأَمْثَالُ نَضْرِبُهَا لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَفَكَّرُونَ

குர்ஆன் 59:21 "(நபியே!) நாம் ஒரு மலையின் மீது இந்தக் குர்ஆனை இறக்கியிருந்தோமானால் அல்லாஹ்வின் பயத்தால், அது நடுங்கிப் பிளந்து போவதைக் கண்டிருப்பீர். மேலும் மனிதர்கள் சிந்திக்கும் பொருட்டு இத்தகைய உதாரணங்களை நாம் அவர்களுக்கு விளக்குகிறோம்."

இணைவைப்பவர்கள் அல்லாஹ் அல்லாத மற்ற நாயன்மார்களை அவர்கள் வணங்குவதற்குச் சொன்ன காரணம் அல்லாஹ்விடம் நேரில் கேட்பதை விட சிபாரிசுத் தெய்வகங்கள் மூலம் கேட்பதால் மிகுந்த பலன் உண்டு என்று நம்பினார்கள்.

ஏக நாயன் அல்லாஹ் வேறு. அவனிடம் சிபாரிசு செய்யும் நாயன்மார்கள் வேறு. அல்லாஹ்வையும் அவனிடம் சிபாரிசு செய்யும் நாயன்மார்களையும் ஒன்றாக்க முடியாது என்று கருதினார்கள். அதனால்தான் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

"வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ் ஒருவனே. அவனைத் தவிர மற்ற நாயன்மார்கள் இல்லை" என்று கலிமாவிற்கு விளக்கம் சொல்லும்போது காபிர்கள் ஆச்சரியப்பட்டு, முஹம்மத் எல்லாத் தெய்வங்களையும் ஒரே நாயனாகவா ஆக்கிவிட்டார்! இது ஆச்சரியமே என்று சொன்னார்கள்.

أَجَعَلَ الْآلِهَةَ إِلَٰهًا وَاحِدًا ۖ إِنَّ هَٰذَا لَشَيْءٌ عُجَابٌ

குர்ஆன் 38:5 "இவர் (எல்லாத்) தெய்வங்களையும் ஒரே நாயனாக ஆக்கிவிட்டாரா? நிச்சயமாக இது ஓர் ஆச்சரியமான விஷயமே" (என்றும் கூறினர்)

இறைவன் குறிப்பற்றவன். அவனை எந்தக் குறிப்பிலும் கட்டுப்படுத்தி வணங்கக் கூடாது. சிபாரிசுத் தெய்வங்கள் என்பது இல்லை. அவைகளால் எதுவும் செய்ய இயலாது என்பதை இறைவன் மக்களுக்கு உணர்த்த "லா இலாஹா இல்லல்லாஹ" நாயன் இல்லை. அல்லாஹ்வைத் தவிர" என்ற கலிமாவை வெளிப்படுத்தினான்.

நீங்கள் பல குறிப்புகளில் வணங்குகிற நாயன் இல்லை என்பதை வலியுறுத்த "லா இலாஹா" என்ற சொல்லும், குறிப்பற்றவனாகிய அல்லாஹ்வையே வணங்க வேண்டுமென்பதை வலியுறுத்த "இல்லல்லாஹ்" என்ற சொல்லும் வெளியானது.

கலிமாவின் தொடக்கமாகிய "லா" என்னும் சொல் இறைவனைக் குறிப்பில் கட்டுப்படுத்துவதை ரத்து செய்து "இல்லல்லாஹ்" எனும் சொல்லாகிய குறிப்பற்றதில் அவனைத் தரிப்படுத்துகிறது. இறைவன் குறிப்பற்றவன் என்று சொல்வதை வைத்துப்

படைப்பினங்கள் உள்ளமையையும் ஹக்குடைய உள்ளமையையும் ஒன்றாகக் கருதக் கூடாது.

ஏனென்றால் படைப்பினங்கள் அழியக்கூடியன. உண்மைப் பொருள் அல்ல. அல்லாஹ் என்றும்அழியாதவன். உண்மையானவன் என்று உள்ளமையை இரண்டுபடுத்தி ஆஸ்திகர்களில் ஒரு பிரிவினர் இறைவனை வணங்குகின்றனர். இவர்கள் "துவைதிகள்" என்றழைக்கப்படுகின்றனர்.
"உள்ளமையைக் கொண்டே பிரபஞ்சம் படைக்கப்பட்டது" என்று வேதங்கள் கூறுவதால் பிரபஞ்சங்களின் உள்ளமையும், இறைவனின் உள்ளமையும் ஒன்றுதான். எனவே இறைவனுக்கு அன்னியமாய் நாம்இல்லை. நமக்கு அன்னியமாய் இறைவனில்லை என்ற கொள்கையின் அடிப்படையில் உள்ளமையை ஒன்றுபடுத்தி இறைவனை வணங்குபவர்கள் "அத்வைதிகள்" என்றழைக்கப்படுகின்றனர்.

இறைவனுக்கும் பிரபஞ்சத்திற்கும் ஒரே உள்ளமை என்றால் அல்லாஹ் அல்லாதவை என்பது இருக்க முடியாதே! அப்படியானால் அல்லாஹ் அல்லாததை வணங்க வேண்டாமென்று குர்ஆன் எச்சரிப்பது ஏன்? என்ற கேள்வியை துவைதிகள் ஏற்படுத்தி, சிருஷ்டிகள் "அல்லாஹ் அல்லாதவை" என்று முடிவு செய்தனர். அப்படியானால் அல்லாஹ்வைப் பற்றியும் அல்லாஹ் அல்லாதவைப் பற்றியும் குர்ஆன் என்ன சொல்கிறது? என்பதை இனி கவனிப்போம்.

**அல்லாஹ் அல்லாதவைப் பற்றி முஸ்லிம்களின் கருத்து:**

"லா இலாஹா இல்லல்லாஹ்" நாயன் இல்லை. அல்லாஹ்வைத் தவிர" என்பது இக்கலிமாவின் பொருள். ஏக நாயன் அல்லாஹ்தான் என்று முஷ்ரிகுகள் ஒப்புக் கொண்ட போதிலும், அல்லாஹ் அல்லாதவற்றையும் தங்கள் நாயன்மார்களாக முஷ்ரிகுகள் வணங்கினர். அவ்விதம் வணங்கியதற்கு அவர்கள் சொன்ன காரணம்:

ஏக நாயனாகிய அல்லாஹ்விடம் எங்களுக்காக மன்றாட்டம் செய்வதற்கு இந்த நாயன்மார்களை வணங்குகிறோம் என்பதாகும். தங்களுக்கே யாதொரு நன்மையும் தீமையும் செய்ய இயலாத அல்லாஹ் அல்லாதவைகளை வணங்க வேண்டாமென்று அல்லாஹ் குர்ஆனில் கட்டளையிட்டுள்ளான்.

இது சம்பந்தமாக தெய்வத் திருவசனங்கள் இவைகள்:
குர்ஆன் 29:61

وَلَئِن سَأَلْتَهُم مَّنْ خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ وَسَخَّرَ الشَّمْسَ وَالْقَمَرَ لَيَقُولُنَّ اللَّهُ ۖ فَأَنَّىٰ يُؤْفَكُونَ

"மேலும் நபியே! இவர்களிடத்தில் வானங்களையும் பூமியையும் படைத்து, சூரியனையும் சந்திரனையும் தன் நியதியில் செயல்படச் செய்தவன் யார்? என்று

கேட்டால் “அல்லாஹ்“ என்றே இவர்கள் திட்டமாகக் கூறுவார்கள். அவ்வாறாயின் அவர்கள் உண்மையை விட்டு எங்கே திருப்பப்படுகிறார்கள்“

وَيَعْبُدُونَ مِن دُونِ اللَّهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنفَعُهُمْ وَيَقُولُونَ هَٰؤُلَاءِ شُفَعَاؤُنَا عِندَ اللَّهِ ۚ قُلْ أَتُنَبِّئُونَ اللَّهَ بِمَا لَا يَعْلَمُ فِي السَّمَاوَاتِ وَلَا فِي الْأَرْضِ ۚ سُبْحَانَهُ وَتَعَالَىٰ عَمَّا يُشْرِكُونَ

10:18: “ தங்களுக்கு யாதொரு நன்மையோ தீமையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாதவற்றை முஷ்ரிகுகள் வணங்குகிறார்கள். இன்னும் அவர்கள் “இவை எங்களுக்காக அல்லாஹ்விடம் மன்றாட்டம் செய்பவை“ என்று கூறுகிறார்கள். அதற்கு நீர் “வானங்களிலோ பூமியிலோ அல்லாஹ் அல்லாதவை இருக்கின்றன என எண்ணிக் கொண்டு நீங்கள் அவர்களுக்கு அறிவிக்கிறீர்களா? அவன் மிகவும் பரிசுத்தமானவன். அவர்கள் இணை வைப்பதை விட மிகவும் உயர்ந்தவனென்று கூறும்.“

إِنَّ الَّذِينَ تَدْعُونَ مِن دُونِ اللَّهِ عِبَادٌ أَمْثَالُكُمْ ۖ فَادْعُوهُمْ فَلْيَسْتَجِيبُوا لَكُمْ إِن كُنتُمْ صَادِقِينَ

7:194: “நிச்சயமாக அல்லாஹ்வையன்றி எவற்றை நீங்கள் அழைக்கின்றீர்களோ அவையும் உங்களைப் போன்று அடிமைகளே! நீங்கள் உண்மையாளராக இருந்தால் அவற்றை அழைத்துப் பாருங்கள். அவை உங்களுக்குப் பதில் அளிக்கட்டும்“

وَيَعْبُدُونَ مِن دُونِ اللَّهِ مَا لَمْ يُنَزِّلْ بِهِ سُلْطَانًا وَمَا لَيْسَ لَهُم بِهِ عِلْمٌ ۗ وَمَا لِلظَّالِمِينَ مِن نَّصِيرٍ

22:71: “மேலும் இவர்கள் அல்லாஹ் அல்லாததை வணங்குகின்றனர். இதற்கு அவன் எந்தவிதமான அத்தாட்சியையும் இறக்கவில்லை. இ(வ்வாறு வணங்குப)வர் கருத்துக்கு எவ்வித கல்வி ஆதாரமும் இல்லை. எனவே இத்தகைய அநியாயக் காரர்களுக்கு உதவி செய்வோர் இல்லை“.

يَا أَيُّهَا النَّاسُ ضُرِبَ مَثَلٌ فَاسْتَمِعُوا لَهُ ۚ إِنَّ الَّذِينَ تَدْعُونَ مِن دُونِ اللَّهِ لَن يَخْلُقُوا ذُبَابًا وَلَوِ اجْتَمَعُوا لَهُ ۖ وَإِن يَسْلُبْهُمُ الذُّبَابُ شَيْئًا لَّا يَسْتَنقِذُوهُ مِنْهُ ۚ ضَعُفَ الطَّالِبُ وَالْمَطْلُوبُ

22:73 : “மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது. எனவே செவி தாழ்த்திக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வை(வேறு) எவற்றை நீங்கள் பிரார்த்திக்கிறீர்களோ, அவையெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக் கூட படைக்க முடியாது. ன்னும்அவற்றிடமிருந்து ஒரு பொருளை எடுத்துக் கொண்டு போனால் அவற்றால் அதனை (அந்த ஈயிடமிருந்து) திரும்பக் கைப்பற்ற முடியாது. தேடுவோரும் தேடப்படுவோரும் பலஹீனர்களே“

مَثَلُ الَّذِينَ اتَّخَذُوا مِن دُونِ اللَّهِ أَوْلِيَاءَ كَمَثَلِ الْعَنكَبُوتِ اتَّخَذَتْ بَيْتًا ۖ وَإِنَّ أَوْهَنَ الْبُيُوتِ لَبَيْتُ الْعَنكَبُوتِ ۖ لَوْ كَانُوا يَعْلَمُونَ

29:41 : “அல்லாஹ் அல்லாதவற்றைத் தங்களுக்குப் பாதுகாவலர்களாக எடுத்துக் கொள்பவர்களுக்கு உதாரணம் சிலந்திப் பூச்சியின் உதாரணம் போன்றது. அது (தனக்காக) ஒரு வீட்டைக் கட்டியது. ஆனால் வீடுகளிலெல்லாம் மிகவும் பலவீனமானது சிலந்திப் பூச்சியின் வீடாகும். இதனை அவர்கள் அறிந்து கொள்வார்களாயின் (அல்லாஹ்வுக்கு இணையாக) தாங்கள் எடுத்துக் கொண்டவற்றின் பலவீனத்தை அறிவார்கள்“.

اللَّهُ الَّذِي خَلَقَكُمْ ثُمَّ رَزَقَكُمْ ثُمَّ يُمِيتُكُمْ ثُمَّ يُحْيِيكُمْ ۖ هَلْ مِن شُرَكَائِكُم مَّن يَفْعَلُ مِن ذَٰلِكُم مِّن شَيْءٍ ۚ سُبْحَانَهُ وَتَعَالَىٰ

عَمَّا يُشْرِكُونَ

30:40 : “ அல்லாஹ்தான் உங்களைப் படைத்தான். பின் உங்களுக்கு உணவு வசதிகளை அளித்தான். அவனே பின்னால் உங்களை மரிக்கச் செய்கின்றான். பின் அவனே உங்களை உயிர்ப்பிப்பான். இவற்றில் ஏதேனும் ஒன்றை உங்கள் இணைத் தெய்வங்கள் செய்யக்கூடியதாக இருக்கிறதா? அல்லாஹ் மிகவும் தூயவன். அவர்கள் இணை வைப்பதை விடவும் உயர்ந்தவன்“

وَالَّذِينَ يَدْعُونَ مِن دُونِ اللَّهِ لَا يَخْلُقُونَ شَيْئًا وَهُمْ يُخْلَقُونَ

16:20 : “அல்லாஹ்வையன்றி வேறெவற்றை அவர்கள் ஆண்டவன் என்று அழைக்கிறார்களோ, அவை எந்தப் பொருளையும் படைக்க முடியாது. அவர்கள் அழைப்பவையும் படைக்கப்பட்ட சிருஷ்டிகளே ஆகும்.“

أَمْوَاتٌ غَيْرُ أَحْيَاءٍ ۖ وَمَا يَشْعُرُونَ أَيَّانَ يُبْعَثُونَ

16:21 : “அவை இறந்தவையே. உயிருள்ளவையுமல்ல. மேலும் (மனிதர்கள் மரித்தபின்) எப்போது எழுப்பப்படுவார்கள் என்பதையும் அவை அறியா“.

قُلْ أَرَأَيْتُم مَّا تَدْعُونَ مِن دُونِ اللَّهِ أَرُونِي مَاذَا خَلَقُوا مِنَ الْأَرْضِ أَمْ لَهُمْ شِرْكٌ فِي السَّمَاوَاتِ ۖ ائْتُونِي بِكِتَابٍ مِّن قَبْلِ

هَٰذَا أَوْ أَثَارَةٍ مِّنْ عِلْمٍ إِن كُنتُمْ صَادِقِينَ

46:4 : “நீங்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றைக் கவனித்தீர்களா? பூமியிலுள்ள எதனை அவை படைத்துள்ளன? அல்லது அவற்றிற்கு வானங்களில் ஏதாவது பங்குண்டா? என்பை எனக்குக் காட்டுங்கள். நீங்கள் உண்மையாளராக இருந்தால் இதற்கு முன்னேயுள்ள ஒரு வேதத்தையோ அல்லது (முன்னோர்களில்) அறிவு ஞானங்களில் மிஞ்சிய ஏதேனும் ஒரு பகுதியையோ (உங்கள் கூற்றுக்கு ஆதாரமாக) என்னிடம் கொண்டு வாருங்கள்“ என்று நபியே நீர் கூறுவீராக!“

وَمَنْ أَضَلُّ مِمَّن يَدْعُو مِن دُونِ اللَّهِ مَن لَّا يَسْتَجِيبُ لَهُ إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ وَهُمْ عَن دُعَائِهِمْ غَافِلُونَ

www.sufimanzil.org

46:5 : "கியாமநாள் வரை (அழைத்தாலும்) தனக்கு பதில் கொடுக்கமாட்டாத அல்லாஹ் அல்லாதவற்றை அழைப்பவர்களை விட வழிகெட்டவர்கள் யார்? அவர்களது அழைப்பையே அவை அறிவதில்லையே!"

وَإِذَا حُشِرَ النَّاسُ كَانُوا لَهُمْ أَعْدَاءً وَكَانُوا بِعِبَادَتِهِمْ كَافِرِينَ

46:6 : "அன்றியும் மனிதர்கள் ஒன்று கூட்டப்படும் (அந்நாளில்) இவை அவர்களுடைய பகைவராயிருக்கும். அவர்கள் தங்களை வழிபட்டுக் கொண்டு இருந்ததையும் நிராகரித்து விடும்."

هُنَالِكَ تَبْلُو كُلُّ نَفْسٍ مَّا أَسْلَفَتْ ۚ وَرُدُّوا إِلَى اللَّهِ مَوْلَاهُمُ الْحَقِّ ۖ وَضَلَّ عَنْهُم مَّا كَانُوا يَفْتَرُونَ

10:30 : "அங்கு ஒவ்வொரு ஆத்மாவும் தான் செய்தனுப்பிய செயல்களின் பலனைச் சோதித்துப் பார்த்துக் கொள்வர். பின்பு அவர்கள் தங்கள் உண்மை இறைவனான அல்லாஹ்வின் பக்கம் திருப்பிக் கொண்டு வரப்படுவார்கள். இவர்கள் கற்பனை செய்து கொண்ட தெய்வங்கள் அனைத்தும் அவர்களை விட்டும் மறைந்து விடும்."

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنَّمَا الْخَمْرُ وَالْمَيْسِرُ وَالْأَنصَابُ وَالْأَزْلَامُ رِجْسٌ مِّنْ عَمَلِ الشَّيْطَانِ فَاجْتَنِبُوهُ لَعَلَّكُمْ تُفْلِحُونَ

5:90 : "ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும் ஷைத்தானின் அருவருக்கத்தக்க செய்கைகளில் உள்ளவையாகும். ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்."

மேலே கண்ட விளக்கத்திலிருந்து நமக்கு கிடைக்கும் தெளிவான உண்மைகள் இவைகள்:

1. நாயன்(இலாஹு) என்பது இறைவன் ஒருவனையே குறிக்கும். அவனே வணக்கதிற்குரிய ஏக நாயன்.
2. அல்லாஹ்வுக்கு அந்நியமாக வேறு தெய்வங்கள் இல்லை. ஆகையால் சிபாரிசு தெய்வங்கள் என்பது இல்லை.
3. அல்லாஹ் நீக்கமற நிறைந்தவன். அவனை எந்தக் கண்டிப்பிலும் கட்டுப்படுத்த முடியாது. எனவே இறைவனை உருவகப்படுத்தி வணங்கக் கூடாது.
4. மறைந்த சான்றோர்களை இணை தெய்வமாகவோ, சிபாரிசு தெய்வமாகவோ உருவகப்படுத்தி அல்லாஹ்வுக்கு இணை வைத்து வணங்கக் கூடாது.
5. இறைத்தூதர்கள் (நபிமார்கள்) போதனையை ஏற்றுக் கொண்டவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடையை பெற்றனர். அதனை நிராகரித்தவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளாயினர்.
6. எங்கும் நிறைந்த நாயனை நாம் காண முடியாது போயினும் அவன் நம்மைப் பார்க்கிறான். எனவே நாம் அவனைப் பார்ப்பதாக பாவித்து அல்லாஹ்வை வணங்க வேண்டும்.



www.sufimanzil.org

7. அல்லாஹ் அல்லாதவைகளை வணங்கக் கூடாது. சிலை வணக்கம் கூடாது. இவ்விதம் முஸ்லிம்கள் அல்லாஹ்வை அறிந்து வணங்குவதே ஷரீயஅத் படி சிறப்புடைய வணக்கமாகும்.

சிலைகளை வணங்கக் கூடாது என்ற விசயத்திலும், அல்லாஹ்வையன்றி வேறு தெய்வத்தை வணங்கக் கூடாது என்ற விசயத்திலும் முஸ்லிம்களிடையே கருத்து வேறுபாடு இல்லை.

ஆனால் "அல்லாஹ் அல்லாதவை" எவை என்ற விசயத்தில் முஸ்லிம்களிடையே அபிப்பிராயப் பேதம் உண்டு. சிருஷ்டிக்கப்பட்டவை அனைத்தும் "அல்லாஹ் அல்லாதவை" என்ற கொள்கையுடையோர் ஒருசாரார். இவர்கள் **இஜாதியா(துவைதிகள்)** என்றழைக்கபடுகின்றனர்.

அல்லாஹ்வின் அறிவில் அமைந்திருந்த உள்ளிடைத் தத்துவங்களே சிருஷ்டிகளாக வெளியாவதால் சிருஷ்டிகளை **"அல்லாஹ் அல்லாதவை"** என்று கருத முடியாது என்ற கொள்கையுடையோர் வுஜூதியாக்கள் என்றழைக்கப்படும் அத்வைதிகளாவர்.

இவ்விரு சாராரும் தங்கள் கொள்கைகளுக்கு குர்ஆன் வசனங்களையே ஆதாரமாக காட்டுகின்றனர். குர்ஆன் வசனங்களைக் கவனித்து ஆய்வதற்கும் அறிவுடையோர் அதன் மூலம் நல்லுணர்வு பெறுவதற்கும் குர்ஆன் அருளப்பட்டதாக அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.

كِتَابٌ أَنزَلْنَاهُ إِلَيْكَ مُبَارَكٌ لِّيَدَّبَّرُوا آيَاتِهِ وَلِيَتَذَكَّرَ أُولُو الْأَلْبَابِ

38:29 : "நபியே! பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை உம்மீது அருளியுள்ளோம். அவர்கள் இதன் வசனங்களைக் கவனித்து ஆய்வதற்காகவும், அறிவுடையோர் இதை நினைத்து நல்லுணர்வு பெறுவதற்காகவும்."

மேற்சொன்ன தெய்வத் திருவசனக் கருத்துப்படி நாமும் இவ்விருசாரார் காட்டும் குர்ஆன் ஆதாரங்களை ஆராய்வோமாக!

## அத்தியாயம் 2

### பிரபஞ்சம் பற்றிய சிந்தனை

உண்மையைக் கொண்டே வானம், பூமிகளைப் படைத்ததாக அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.

أَلَمْ تَرَ أَنَّ اللَّهَ خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ بِالْحَقِّ إِن يَشَأْ يُذْهِبْكُمْ وَيَأْتِ بِخَلْقٍ جَدِيدٍ

14: 19 : “நிச்சயமாக அல்லாஹ் வானங்களையும், பூமியையும் உண்மையைக் கொண்டே படைத்திருக்கிறான் என்பதை நீர் பார்க்கவில்லையா? அவன் நாடினால் உங்களைப் போக்கிவிட்டு புதியதொரு படைப்பைக் கொண்டு வருவான்“

خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ بِالْحَقِّ ۚ تَعَالَىٰ عَمَّا يُشْرِكُونَ

16:3 : “அவன் வானங்களையும், பூமியையும் உண்மையைக் கொண்டு படைத்துள்ளான். அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் அவன் மிக்க மேலானவன்.“

وَمَا خَلَقْنَا السَّمَاوَاتِ وَالْأَرْضَ وَمَا بَيْنَهُمَا إِلَّا بِالْحَقِّ

15:85 : “நிச்சயமாக, நாம் வானங்களையும், பூமியையும், இவை இரண்டிற்குமிடையே உள்ளவற்றையும் உண்மையைக் கொண்டே அல்லாது படைக்கவில்லை.“

خَلَقَ اللَّهُ السَّمَاوَاتِ وَالْأَرْضَ بِالْحَقِّ ۚ إِنَّ فِي ذَٰلِكَ لَآيَةً لِّلْمُؤْمِنِينَ

29:44 : “வானங்களையும், பூமியையும் அல்லாஹ் உண்மையைக் கொண்டே படைத்துள்ளான். நிச்சயமாக இதில் முஃமின்களுக்கு அத்தாட்சி இருக்கிறது.“

خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ بِالْحَقِّ وَصَوَّرَكُمْ فَأَحْسَنَ صُوَرَكُمْ ۖ وَإِلَيْهِ الْمَصِيرُ

64:3 : “வானங்களையும், பூமியையும் அவன் சத்தியத்துடன் (தக்கமுறையில்) படைத்துள்ளான். அன்றியும் உங்களை உருவாக்கி, உங்கள் உருவங்களையும் அழகாக்கினான். அவனிடம்தான் (யாவருக்கும்) மீளுதல் இருக்கிறது.“

எந்தப் பொருள் எக்காலத்திலும் அழியாப் பொருளாக இருக்கிறதோ அதுவே உண்மையான பொருள். இறைவனின் உள்ளமைதான் என்றும் அழியாதது.ஆகவே இறைவன் பிரபஞ்சத்தைத் தன் உள்ளமையைக் கொண்டே படைத்தான். ஆகையால் பிரபஞ்சத்தின் உள்ளமை **ஹக்குடைய உள்ளமையே என்பது அத்வைதிகளின் கருத்து.**

பிரபஞ்சத்தின் உள்ளமை ஹக்குடைய உள்ளமை அல்ல. ஏனென்றால் பிரபஞ்சத்தின் உள்ளமை ஹக்குடைய உள்ளமையாக இருந்தால் பிரபஞ்சம் ஹக்கைப் போல் நிலைத்திருக்க வேண்டும். இக்குறைபாடு பிரபஞ்சத்தில் காணப்படுவதால் பிரபஞ்சத்தின் உள்ளமை ஹக்குடைய உள்ளமையினின்றும் வேறானது என்பது துவைதிகளின் கருத்து.

“குன்“ என்ற கட்டளையை அல்லாஹ் இன்மையை நோக்கியே சொன்னான் என்றும், தோன்றும் சிருஷ்டிகள் சுதந்திரமாய் நடக்க சிருஷ்டிகளுக்கு உள்ளமை வேண்டியதிருந்ததால் இறைவன் அவைகளுக்கு தற்காலிக உள்ளமையை இன்மையிலிருந்து அளித்தான் என்றும் அவ்விதம்

ஹக்கினால் சிருஷ்டிகளுக்கு அளிக்கப்பட்ட உள்ளமை தற்காலிக உள்ளமையாதலால் சிருஷ்டிகள் அழியக் கூடியதென்றும், ஹக்கு என்றும் அழியாதவன் என்றும் துவைதிகள் கருத்துக் கூறி, அதற்கு ஆதாரமாகக் கீழ்க்கண்ட தெய்வத் திருவசனத்தை மேற்கோள் காட்டுகின்றனர்.

إِنَّمَا أَمْرُهُ إِذَا أَرَادَ شَيْئًا أَنْ يَقُولَ لَهُ كُنْ فَيَكُونُ

36:82 : "எப்பொருளையேனும் அவன் (படைக்க) நாடினால் அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம் "குன்"(ஆகிவிடுக) என்று கூறுவது தான். உடனே அது ஆகிவிடுகிறது."

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ. وَيَبْقَىٰ وَجْهُ رَبِّكَ ذُو الْجَلَالِ وَالْإِكْرَامِ

55:26,27 : "பூமியில் உள்ளவையாவும் அழிந்தே போகும். மிகக் கண்ணியமும் பெருமையும் தங்கிய உமது இறைவன் மட்டும் நிலைத்திருப்பான்"

"குன்" என்ற கட்டளையை அல்லாஹ் இன்மையை நோக்கிச் சொல்லவில்லை. அவனது சம்பூரண அறிவை நோக்கியே சொன்னான். அவனது அறிவில் தரிபட்டவையே கோலங்களாயின. கற்பனையில் தோன்றிய கோலங்கள் கற்பனை செய்தவனாகிய ஹக்கின் பக்கமே மீண்டு விடுகிறபடியால் தோன்றிய சிருஷ்டிகள் நிலைத்திருப்பதில்லை என்பது அத்வைதிகளின் கருத்து.

பிரபஞ்சம் அல்லாஹ் அல்லாதவை என்ற கருத்தில் துவைதிகளும், பிரபஞ்சம் அல்லாஹ்விற்கு அன்னியமில்லை என்ற கருத்தில் அத்வைதிகளும் இருப்பதால் **"அல்லாஹ் அல்லாதவை"** என்ற கருத்தில் முஸ்லிம்களுக்குள் ஏகோபித்த முடிவில்லை.

அல்லாஹ்வை அறியும் ஞானத்தில் முஸ்லிம்கள் மூன்று பிரிவாகப் பிரிந்தனர். அம்மூன்று பிரிவினர்களின் விபரம்:

1. **இஜாதியா(துவைதிகள்)**
2. **சுஹூதியா(வசிஸ்டாத் வைதிகள்)**
3. **உஜூதியா(அத்வைதிகள்)**

உயிர், ஜடம், இறைவன் இம்மூன்றும் உள்ளமைப் பொருள் என்றும், இம்மூன்றில் இறைவன் ஆட்சிக்கு உயிர், ஜடம் இரண்டும் கட்டுப்பட்டவை என்பது இஜாதியாக்கள் ஆகிய துவைதிகளின் கொள்கை.

உயிர், ஜடம், இறைவன் இம்மூன்றும் உள்ளமைப் பொருள் என்றும், உயிர், ஜடமிரண்டிலும் உயிருக்குள் உயிராய் இறைவன் வியாபகமாகியுள்ளான் என்னும் கொள்கையுடையவர்கள் சுஹூதியாக்கள் என்ற விசிஸ்டாத்வைதிகள்.

உயிர், ஜடம், இறைவன் இம்மூன்றிலும் இறைவன் ஒருவனே உள்ளமைப் பொருள் என்றும், உயிரும், ஜடமும் இறைவனின் அறிவில் தரிப்பட்டவை அவைகளின் உள்ளமை ஹக்குடைய உள்ளமையே என்னும் கொள்கையுடையோர் உஜூதியாக்கள் எனும் அத்வைதிகள்.

முதலில் மனிதன் படைக்கப்பட்டதைப் பற்றி குர்ஆன் என்ன கூறுகிறதெனக் காண்போம். ஒரே ஆத்மாவிலிருந்து மனிதனைப் படைத்ததாக அல்லாஹ் குர்ஆனில் சொல்கிறான்.

وَهُوَ الَّذِي أَنشَأَكُم مِّن نَّفْسٍ وَاحِدَةٍ فَمُسْتَقَرٌّ وَمُسْتَوْدَعٌ ۗ قَدْ فَصَّلْنَا الْآيَاتِ لِقَوْمٍ يَفْقَهُونَ

6:98 : "உங்கள் அனைவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உண்டாக்கிப் பின் (உங்கள் தந்தையிடம்) தங்க வைத்துப் (பின்னர் கர்ப்பத்தில்) ஒப்படைப்பவனும் அவனே! சிந்தித்து விளங்கக் கூடிய மக்களுக்கு நிச்சயமாக நம் வசனங்களை விவரித்துள்ளோம்."

يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُم مِّن نَّفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً ۚ

4:1 : "மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். ஆதமை அவ்வாறே படைத்து அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து அநேக ஆண்களையும், பெண்களையும் வெளிப்படுத்தி உலகில் பரவச் செய்தான்."

ஒரே ஆத்மாவிலிருந்து மனிதர்கள் படைக்கப்பட்டு இருந்தால் மனிதர்களில் வேற்றுமை ஏன்? உயர்வு, தாழ்வு ஏன்? என்பதைச் சிந்தித்தவர்கள் ஆன்மாவைப் பற்றி நபியிடம் கேட்டதற்கு அல்லாஹ் பின்வருமாகு கூறுகிறான்.

وَيَسْأَلُونَكَ عَنِ الرُّوحِ ۖ قُلِ الرُّوحُ مِنْ أَمْرِ رَبِّي وَمَا أُوتِيتُم مِّنَ الْعِلْمِ إِلَّا قَلِيلًا

17:85 : "நபியே! உம்மிடம் ரூஹைப் பற்றி (ஆத்மா) அவர்கள் கேட்கிறார்கள். ரூஹு என் றப்புடைய கட்டளையினின்று உண்டானது. இன்னும் ஞானத்திலிருந்து உங்களுக்கு அளிக்கப்பட்டது மிகச் சொற்பமேனயன்றி வேறில்லை எனக் கூறுவீராக."

இதன்மூலம் தெரிவது என்னவென்றால், ரூஹு அல்லாஹ்வின் கட்டளைப்படி வெளியானது. அவ்விதம் வெளியான ரூஹைப் பற்றி விளங்கக் கூடிய முழு ஞானத்தை மனிதனுக்கு கொடுக்கப்படவில்லை என்பதை வலியுறுத்தவே ஞானத்திலிருந்து உங்களுக்கு அளிக்கப்பட்டது மிகச் சொற்பமென்று அல்லாஹ் இந்த ஆயத்தில் குறிப்பிடுகிறான். "ஆன்மா என்பது அல்லாஹ்வின் சம்பூரணமான அறிவின் கட்டளையாதலால் ஹக்குடைய உள்ளமையையும்,

மனிதனுடைய உள்ளமையும் ஒன்றுதான் என வுஜூதியாக்கள் கருதுகின்றனர். மனிதனுடைய உள்ளமை ஹக்குடைய உள்ளமையாக இருந்தால் ஹக்கைப் போல் மனிதனும் முழு ஞானமுடையவனாக இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றவர்கள் இஜாதியாக்கள், மனிதன் ஞானமாகிய அகண்டத்தையும், அஞ்ஞானமாகிய கண்டத்தையும் பொருந்தியவனானதால் மனிதன் கண்டம் கடக்கும் வரை அதாவது அஞ்ஞானத்தைக் கடக்கும்வரை ஹக்கின் முழுஞானம் மனிதனுக்கு சிந்திக்கக் கூடியதல்ல என்றும், அவ்விதம் சிந்திக்காத காரணத்தால் ஹக்கின் உள்ளமையினின்றும் மனிதன் சிருஷ்டிக்கப்படவில்லை என்ற முடிவுக்கு வரமுடியாது என்று வுஜூதியாக்கள் கருதுகின்றனர்.

“ஏக ஆன்மாவிலிருந்து மனிதன் படைக்கப்படவில்லை என்பதற்கு இஜாதியாக்கள் கூறும் இன்னொரு காரணம்: ஏக ஆன்மாவிலிருந்து மனிதன் படைக்கப்பட்டால் மனிதன் ஹக்கைப் போல் அழியாதவனாக இருக்க வேண்டுமே! மனிதன் மரிப்பதாகக் குர்ஆன் குறிப்பிடுவதால் மனிதன் ஹக்குடைய ஆன்மாவிலிருந்து படைக்கப்படவில்லை என்கின்றனர். அதற்கு அவர்கள் காட்டும் குர்ஆன் ஆதாரம் இதுவே:

كُلُّ نَفْسٍ ذَائِقَةُ الْمَوْتِ ۖ ثُمَّ إِلَيْنَا تُرْجَعُونَ

29:57 : “ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தை சுகிக்கக் கூடியதே ஆகும். பின்னர் நீங்கள் நம்மிடமே மீட்கப்படுவீர்கள்“

إِنَّكَ مَيِّتٌ وَإِنَّهُم مَّيِّتُونَ

39:30 : “நிச்சயமாக நீரும் மரிப்பவர். நிச்சயமாக அவர்களும் மரிக்கிறவர்களே!“

وَمَا جَعَلْنَا لِبَشَرٍ مِّن قَبْلِكَ الْخُلْدَ ۖ أَفَإِن مِّتَّ فَهُمُ الْخَالِدُونَ

21:34 : “நபியே உமக்கு முன்னர் எந்த மனிதனுக்கும் அவன் என்றென்றும் இருக்கக் கூடிய நித்திய வாழ்வை நாம் கொடுக்கவில்லை. ஆகவே நீர் மரித்தால் அவர்கள் மட்டும் என்றென்றும் வாழப்போகிறார்களா?“

இஜாதியாக்கள் குறிப்பிடும் மேற்கண்ட குர்ஆன் வசனங்கள் மனிதனது ஜடத்தை இயக்கும் உயிரைக் குறிப்பிடுவதாகவும், மனிதனது ஜடத்தை இயக்கும் உயிர் தன் ஆட்சியை ஏக ஆன்மாவின் கட்டளைப்படி நிறுத்தியதும் ஜடமாகிய சதர்பூதங்கள் பிரியக்கூடியதுதான் என்றும் வுஜூதியாக்கள் ஜடத்தையும், ஜடத்தை இயக்கும் உயிரையும் ஏக ஆன்மாவின் பிரதிபிம்பமாக கருதுவதாயும் மனிதன் என்பது என்றும் அழியாத ஏக ஆன்மாதான் என்றும் கருதுகின்றனர்.

ஹக்கின் அறிவில் தரிபட்டவையே கோலங்களாக வெளியாகி இருப்பதால் ஹக்குடைய உள்ளமையே சுதந்திரமானது என்ற கொள்கையுடையோர் வுஜூதியாக்கள். இவர்கள் இரு

உள்ளமை என்ற தத்துவத்தை ஒப்புக் கொள்வதில்லை. ஹக்குடைய உள்ளமை வேறு. கல்குடைய உள்ளமை வேறு என்று காண்பவர்கள் துவைதிகள் என்ற இஜாதியாக்கள். ஒரு வகுப்பார் கொள்கைகளுக்கும் ஆதரவான குர்ஆன் ஆதாரங்களையும், அவர்களது கொள்கை விளக்கத்தையும் இனி காண்போம்.

**ஹக்குடைய உள்ளமை சுதந்திரமுடையது என்பதற்குரிய குர்ஆன் ஆதாரங்கள்:**

ஏக ஆன்மாவிலிருந்து மனிதன் படைக்கப்பட்டதால் ஹக்குடைய உள்ளமையும், மனிதனுடைய உள்ளமையும் ஒன்றுதான் என வுஜூதியாக்கள் கருதுகின்றனர். சிருஷ்டிகள் வெளியாகும் முன்பே அவைகள் எப்படி நடத்தாட்டப்படுமென்பதை ஹக்கு தன் மூலப்பதிவேட்டில் பதித்து அதன்படி சிருஷ்டிகள் நடத்தப்படுவதால் ஹக்குடைய உள்ளமைதான் சுதந்திரமுடையதுத என்றும் மனிதனின் உள்ளமை கற்பனா உள்ளமை என்றும் கையின் அசைவே சாவியின் அசைவாக அமைவது போல ஹக்கின் நாட்டப்படியே மனிதன் நடத்தாட்டப்படுவதாக வுஜூதியாக்கள் நம்புகின்றனர். அதற்கு ஆதரவான குர்ஆன் ஹதீதுபின்வருமாறு:-

لَّهُ مَقَالِيدُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ ۗ وَالَّذِينَ كَفَرُوا بِآيَاتِ اللَّهِ أُولَٰئِكَ هُمُ الْخَاسِرُونَ

39:63 :"வானங்களினுடையவும், பூமியினுடையவும் சாவிகள் அவனிடமே இருக்கின்றன. ஆகவே எவர் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரிக்கின்றார்களோ அவர்கள்தான் நஷ்டவாளிகள்."

وَمَا مِن دَابَّةٍ فِي الْأَرْضِ إِلَّا عَلَى اللَّهِ رِزْقُهَا وَيَعْلَمُ مُسْتَقَرَّهَا وَمُسْتَوْدَعَهَا ۚ كُلٌّ فِي كِتَابٍ مُّبِينٍ

11:6 : "இன்னும் உணவளிக்க அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்ளாத எந்தப் பிராணியும் பூமியில் இல்லை. மேலும் அவை தரிபட்டு வாழ்ந்திருக்கும் இடத்தையும் அவன் அறிகிறான். இவைகளனைத்தும் (லவ்ஹில் மஃபூல் என்னும்) தெளிவான புத்தகத்தில் பதிவாகியிருக்கின்றன."

مَا أَصَابَ مِن مُّصِيبَةٍ فِي الْأَرْضِ وَلَا فِي أَنفُسِكُمْ إِلَّا فِي كِتَابٍ مِّن قَبْلِ أَن نَّبْرَأَهَا ۚ إِنَّ ذَٰلِكَ عَلَى اللَّهِ يَسِيرٌ

57:22 : "பூமியிலோ அல்லது உங்களிலோ சம்பவிக்கிற எந்தச் சம்பவமும் அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (லவ்ஹுல் மஃபூல்) ஏட்டில் இல்லாமலில்லை. நிச்சயமாக அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதே ஆகும்."

يَمْحُو اللَّهُ مَا يَشَاءُ وَيُثْبِتُ ۖ وَعِندَهُ أُمُّ الْكِتَابِ

13:39 : "எனினும் தான் நாடியதை அல்லாஹ் அழித்துவிடுவான். தான் நாடியதைஅதில் நிலைத்திருக்கவும் செய்வான். அவனிடத்திலேயே (உம்முல் கிதாப்) மூலப் பதிவேடு இருக்கிறது"

وَمَا تَحْمِلُ مِنْ أُنثَىٰ وَلَا تَضَعُ إِلَّا بِعِلْمِهِ ۚ وَمَا يُعَمَّرُ مِن مُّعَمَّرٍ وَلَا يُنقَصُ مِنْ عُمُرِهِ إِلَّا فِي كِتَابٍ ۚ إِنَّ ذَٰلِكَ عَلَى اللَّهِ يَسِيرٌ

35:11 : "........அவனறியாமல் பெண் கர்ப்பம் தரிப்பதுமில்லை. பிரசவிப்பதுமில்லை. இவ்வாறே ஒவ்வொருவருடைய வயது அதிகப்படுவதும், அவருடைய வயதிலிருந்து குறைப்பதும் (லவ்ஹுல் மஃபூல் எனும்) ஏட்டில் இல்லாமலில்லை. நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு எளிதானதே ஆகும்."

77:30 : "எனினும் அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள் நாடமாட்டீர்கள். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன். ஞானமிக்கவன்".

قُل لَّا أَمْلِكُ لِنَفْسِي نَفْعًا وَلَا ضَرًّا إِلَّا مَا شَاءَ اللَّهُ

7:188 : " நபியே! நீர் கூறும். அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்து கொள்ளச் சக்தி இல்லாதவன்."

قُل لَّا أَمْلِكُ لِنَفْسِي ضَرًّا وَلَا نَفْعًا إِلَّا مَا شَاءَ اللَّهُ ۗ لِكُلِّ أُمَّةٍ أَجَلٌ ۚ إِذَا جَاءَ أَجَلُهُمْ فَلَا يَسْتَأْخِرُونَ سَاعَةً ۖ وَلَا يَسْتَقْدِمُونَ

10:49 : " "நபியே! நீர்கூறும். அல்லாஹ் நாடியதைத் தவிர எனக்கு எவ்விதத் தீமையோ, நன்மையோ எனக்கே செய்து கொள்ள நான் எவ்வித ஆதாரமும் பெற்றிருக்கவில்லை. ஒவ்வொரு சமூகத்தினருக்கும் ஒரு குறிப்பிட்ட கால தவணை உண்டு. அவர்களது தவணை வந்துவிட்டால் ஒரு நாழிகை பிந்தவும் மாட்டார்கள். முந்தவும் மாட்டார்கள்."

وَلَوْ شَاءَ رَبُّكَ لَجَعَلَ النَّاسَ أُمَّةً وَاحِدَةً ۖ وَلَا يَزَالُونَ مُخْتَلِفِينَ

11:118 : "உம் இறைவன் நாடியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருப்பான். (அவன் அப்படி ஆக்கவில்லை) எனவே அவர்கள் எப்போதும் பேதப்பட்டுக் கொண்டேயிருப்பார்கள்."

وَلَقَدْ ذَرَأْنَا لِجَهَنَّمَ كَثِيرًا مِّنَ الْجِنِّ وَالْإِنسِ ۖ لَهُمْ قُلُوبٌ لَّا يَفْقَهُونَ بِهَا وَلَهُمْ أَعْيُنٌ لَّا يُبْصِرُونَ بِهَا وَلَهُمْ آذَانٌ لَّا يَسْمَعُونَ بِهَا ۚ

7:179 : "நிச்சயமாக நாம் ஜின்களிலிருந்தும் மனிதர்களிலிருந்தும் அநேகரை நரகத்திற்கென்றே படைத்துள்ளோம். அவர்களுக்கு இருதயங்களிலிருந்தும் அதைக் கொண்டு நல்லுணர்வு பெற மாட்டார்கள்."

وَلَوْ شِئْنَا لَآتَيْنَا كُلَّ نَفْسٍ هُدَاهَا وَلَٰكِنْ حَقَّ الْقَوْلُ مِنِّي لَأَمْلَأَنَّ جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ أَجْمَعِينَ

32:13 : “ மேலும் நாம் நாடியிருந்தால் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் நேர்வழியைக் கொடுத்திருப்போம். ஆனால் “நான் நிச்சயமாக நரகத்தை ஜின்களையும், மனிதர்களாகிய யாவரையும் கொண்டு நிரப்புவேன்“ என்று நம்மிடமிருந்து முன்னரே வாக்கு வந்துள்ளது.“

وَلَوْ شَاءَ اللَّهُ مَا أَشْرَكُوا ۗ وَمَا جَعَلْنَاكَ عَلَيْهِمْ حَفِيظًا ۖ وَمَا أَنتَ عَلَيْهِم بِوَكِيلٍ

6:107 : “அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் இணை வைத்திருக்கவே மாட்டார்கள். நாம் உம்மை அவர்கள் மீது காப்பாளராக ஏற்படுத்தவும் இல்லை. இன்னும் நீர் அவர்கள் காரியங்களை நிர்வகிக்கும் பொறுப்பாளரும் அல்லர்.“

فَلَمْ تَقْتُلُوهُمْ وَلَٰكِنَّ اللَّهَ قَتَلَهُمْ ۚ وَمَا رَمَيْتَ إِذْ رَمَيْتَ وَلَٰكِنَّ اللَّهَ رَمَىٰ ۚ وَلِيُبْلِيَ الْمُؤْمِنِينَ مِنْهُ بَلَاءً حَسَنًا ۚ إِنَّ اللَّهَ سَمِيعٌ عَلِيمٌ

8:17 : “(பத்ரு போரில்) எதிரிகளை வெட்டியவர்கள் நீங்கள் அல்ல. அல்லாஹ்தான் அவர்களை வெட்டினான். பகைவர்கள் மீது (மண்ணை) எறிந்தபோது அதனை நீங்கள் எறியவில்லை. அல்லாஹ்தான் எறிந்தான். மு.ஃமின்களை அழகான முறையில் சோதிப்பதற்காகவே அல்லாஹ் இவ்வாறு செய்தான். நிச்சயமாக அல்லாஹ் (எல்லாவற்றையும்) செவியேற்பவனாகவும், எல்லாம் அறிபவனாகவும் இருக்கிறான்.“

மேற்கண்ட குர்ஆன் ஆதாரங்களை வைத்து வுஜூதியாக்கள் கீழ்கண்ட கேள்விகளை முன் வைத்தனர். உண்மையைக் கொண்டே பிரபஞ்சத்தைப் படைத்தேன் என்று அல்லாஹ் குர்ஆனில் சொல்வதால் உண்மைப் பொருளாகிய ஹக்கின் உள்ளமைதானே பிரபஞ்சத்தின் உள்ளமையும்? இன்மையிலிருந்து அல்லாஹ் பிரபஞ்சத்தை படைத்தான் என்று யூகித்தால், இன்மையிலிருந்து பிரபஞ்சம் எப்படித் தோன்ற முடியும்? அதற்கு உள்ளமை எப்படி இருக்க முடியும்? தனக்கு அன்னியமாக ஓர் உள்ளமையை பிரபஞ்சத்திற்கு அல்லாஹ் அளித்தான் என்றால், மூலப்பொருள் இரண்டு என்றல்லவா கருத வேண்டியது வரும்? மூலப்பொருள் ஒன்று என்ற குர்ஆன் வசனத்திற்கு இது முரணாகுமே? ஒரே ஆன்மாவிலிருந்து மனிதன் படைக்கப்பட்டதாக குர்ஆன் வசனம் மெய்ப்பிக்கும்போது, மனிதனின் உள்ளமை ஏக ஆன்மாவிற்கு அப்பாற்பட்டதாக எப்படிக் கருத முடியும்? ஹக்கிற்கு அன்னியமாக மனிதனது ரூஹு சுதந்திரமானது என்றால் கலாகதிர்படி மனிதன் நடத்தாட்டப்படுவதாக குர்ஆன் கூறுகிறதே. மேற்கண்ட கேள்விகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டதே அத்வைத சித்தாந்தம் இதுவே.

**வுஜூதியா என்ற அத்வைதிகளின் சித்தாந்தம்:**

சிருஷ்டிகனும், சிருஷ்டிகளும் உள்ளமையைப் பொறுத்தவரை ஒன்றே. இரண்டிற்கும் தனித்தனி உள்ளமை என்பது கிடையாது. சிருஷ்டிகனது கோலம்தான் சிருஷ்கள். “குன்“ என்ற கட்டளைச் சொல் இன்மையை நோக்கி அல்ல. கட்டளைப் பெறப்பெற்றவர்கள் முன்னால் இல்லாமல்

கட்டளை பிறப்பிக்க முடியாது. அவ்வாறு முன்னிலையாக இருந்தவைகள் தான் அல்லாஹ்வின் அறிவில் பொருந்தியிருந்த தத்துவங்களின் கோலங்கள்.

அவைகள் ஹக்குடைய சுயமான உள்ளீடான மேலாம்பரமான யோக்கியதை அல்லது தகுதிகள் ஆகும். அதாவது ஹக்குடைய அறிவில் வஸ்துக்களின் உள்ளமை அமைந்திருக்கிறது. ஆனால் இருப்பது அவன் மட்டுமே! ஏனெனில் அறிவில் உள்ள ஒரு அமைப்பு அதை அமைத்தவனின் அமைப்பு அல்லது கற்பனையாக இருக்குமேயன்றி, அந்த அமைப்பே அமைத்தவனாக இருக்க முடியாது. அந்த அமைப்புக்கு உள்ளமை என்ற பெயரிலோ அல்லது இல்லாமை என்ற பெயரிலோ யாதொரு உள்ளமையும் கிடையாது. ஏனெனில் அறிவில் அமைந்த அமைப்பு அதனை அமைத்தவன் பக்கமே மீண்டு விடுகிறது. அல்லாஹ்வின் அறிவில் தரிபட்டவையே இப்பிரபஞ்சபமாகத் தோற்றமளிக்கிறது. அவனது, தாத்து பூர்வீகமானது போல், அவனது அறிவும் பூர்வீகமானது. அறிவிலிருந்து தான் இப்பிரபஞ்சம் கோலங்களாகி வெளியாகி இருக்கிறது.

இவைகளுக்கு நாம, ரூபாதி பேதங்களேயன்றி தனியான ஹக்கிற்கு வேற்றுமையான யாதொரு உள்ளமையோ, தாத்தோ திரிகாலமும் கிடையாது. தாத்தாலம், சிபாத்தாலும் உள்ளமையைப் பொறுத்தவரை ஒன்றே. கஸ்தூரியும், அதன் வாடையும்போல உள்ளமையில் ஒன்றாயிருப்பினும் நாம, ரூபத்தால் வேற்றுமைபட்டிருக்கின்றன. இந்த நாமரூபத்தைப் பாராட்டுவதனாலேயே வேற்றுமை தொனிக்கிறது. அத்தகைய வேற்றுமை மாயையேயன்றி உண்மையன்று. இப்பிரபஞ்சம் ஹக்கின் அறிவில் தோன்றிய கற்பனை என்பதால் இப்பிரபஞ்சம் அகமியமில்லாத ஒரு வெற்று எண்ணம் என்றும் கருத முடியாது.

அவ்வாறு கருதினால் ஹக்குடைய அறிவுபொய் என்று ஆகிவிடும். அவனது அறிவு பூர்விகமானது போல், அவனது அறிவில் தோன்றிய கற்பனையும் பூர்வீகமானது. தண்ணீரானது கண்டிப்பினிமித்தம் பனிக்கட்டியின் ரூபத்தில் தோன்றுவது போல் ஹக்கின் ஏக வுஜூது தான் தனக்குத் தானே கண்டிப்பாகத் தோன்றுகிறது. கண்டிப்பு மறையும் வேலை தாத்து மட்டும் தரிபட்டிருக்கிறது. இங்கு வஹ்தத்துல் வுஜூது என்ற ஏக உள்ளமை ஸ்தாபிக்கப்பட்டு விடுகிறதாகையால் துவைதம் (இரண்டு) என்பது கிஞ்சிற்றுமில்லை. இப்பிரபஞ்சத்தில் வெளியான கோலங்களில் அல்லாஹ் ஹுலூல்(ஊடே நுழைந்தான்) இத்திஹாது(இரண்டறக் கலத்தல்) என்பது இல்லை. இது அத்வைதிகளின் சித்தாந்தம் ஆகும்.

**இஜாதியாக்களின் கொள்கையும் அதற்குரிய குர்ஆன் ஆதாரங்களும்:**

கீழ்க்கண்ட பொதுவான குர்ஆன் உபதேசங்களே இஜாதியாக்களின் கொள்கைக்கு ஆதாரமாகும். துவைதிகள் தங்கள் கொள்கைக்கு ஆதாரமாக எடுத்துக் கொண்ட குர்ஆன் உபதேசங்கள் பின்வருமாறு:- அல்லாஹ் குர்ஆனில் பல்வேறு இடங்களில் உபதேசிக்கும் பொதுவான உபதேசங்கள் இவை:-

“வானங்களையும், பூமியையும் அல்லாஹ்வே சிருஷ்டித்தான். அவை யாவும் அவனுக்கே சொந்தம். அவற்றின் ஆட்சி அவன் கைவசமே உள்ளது. அவனன்றி படைப்பினங்களுக்கு

காவலனோ, உதவி செய்பவனோ எவருமில்லை. அவனுக்கு இணை எந்த வஸ்துவுமில்லை. இணை வைத்து அவனை வணங்கக் கூடாது. அவனையே வணங்க வேண்டும். அவனிடமே காவல் தேட வேண்டும். அவனது கிருபைக்கு அவனுக்கு நன்றி செலுத்தி, அவன் ஏவிய ஏவலை எடுத்து, விலக்கலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாம் நெறிதவறி விட்டால் அவனிடம் பாவமன்னிப்புக் கேட்க வேண்டும். அவன் நம்மை இரட்சிக்கப் போதுமானவன். அல்லாஹ் அல்லாதவைகளிடம் உதவி தேடக் கூடாது.

இதனையே நபிமார்கள் மூலம் அவன் போதித்தான். அந்தந்த நபிகள் காலத்தில் அவன் போதனைகளை ஏற்றோரும் உண்டு. ஏற்றோர் அவனது அருட்கொடையினைப் பெற்றனர். மறுத்தோர் அவன் சாபத்திற்கு ஆளாயினர்.

மனிதர்கள் யாவரும் மரிப்பவர்கள். நியாயத் தீர்ப்புநாள் நிச்சயம் உண்டு. அதன் அதிபதி அவனே! அந்த நாளில் எந்த ஓர்ஆத்மாவும் இன்னொரு ஆத்மாவுக்கு உதவி செய்ய முடியாது. அவன் போதனையை ஏற்று நடந்தோர் மறுமையில் சுவனபதியிலும், மறுத்தோர் எரி நரகிலும் இருப்பார். இது அல்லாஹ்வின் போதனை என்று இஜாதியாக்கள் ஏற்று இப்போதனையின் அடிப்படையில் அவர்கள் அமைத்துக் கொண்ட சித்தாந்தம்: உயிர், ஜடம், இறைவன் இம்மூன்றும் உள்ளமைப் பொருள். இம்மூன்றும் நிரந்தரமானவை. உயிர், ஜடம், இவற்றைக் கொண்டு இறைவன் பிரபஞ்சத்தைப் படைத்தாலும், அவன் இவற்றிலிருந்து தனித்தே நிற்கிறான். உயிரும், ஜடமும் தங்களை வெளிப்படுத்திக் கொண்டு மாற்றமடைகின்றன. ஆனால் இறைவன் மாறுதலற்றவன். சகல ஜீவராசிகளுக்கும் முக்தி ஸ்தானம் சுவர்க்கமே. அதற்கு மேல் ஜீவராசிகளுக்கும் பதவி இல்லை. உள்ளமை இரண்டு. இதுவே இஜாதியாக்களின் கொள்கை.

**இஜாதியாக்களின் கொள்கையின் அடிப்படையில் அவர்கள் முன்வைக்கும் கேள்விகள்:**

பிரம்மத்தின் உள்ளமையே படைப்பினங்களுக்கும் என்றால், பிரம்மத்துக்குத் தெரிந்த விஷயங்கள் யாவும் படைப்பினங்களுக்குத் தெரிய வேண்டுமே? பிரம்மத்துக்கும், பிரபஞ்சத்துக்கும் ஒரே உள்ளமை என்றால், படைப்பினங்களுக்குள் ஏன் வேற்றுமை?

பிரம்மத்துக்கும், பிரபஞ்சத்துக்கும் ஒரே உள்ளமை என்றால், எல்லாம் கடவுளாயிற்றே. கடவுள் ஏன் கடவுளை வணங்க வேண்டும்.? சர்வமும் ஒரே உள்ளமை என்றால் உலகில் நன்மை செய்பவர் யார்? தீமை செய்பவர் யார்? தெளபா கேட்பவர் யார்? மன்னிப்பவர் யார்?

நபிமார்களாய் வந்தவர்கள் யார்? அவர்களது போதனைகளை ஏற்றோர் யார்? மறுத்தோர் யார்? அழித்தது யாரை? இரட்சித்தது யாரை? மஹ்ஷரில் கேள்வி கேட்பவர் யார்? விடையளிப்பவர் யார்? சுவர்க்கம் புகுவோர் யார்? நரகம் புகுவோர் யார்?

துவைதிகள் இக்கேள்விகளைக் கேட்டு அத்வைதிகளின் கொள்கையை மறுத்தனர். இவர்கள் குர்ஆனுக்கு இரு பொருள் உண்டென்பதை மறுக்கின்றனர். குர்ஆன் லாஹிர் கருத்துக்களை மட்டும் இவர்கள் ஏற்கின்றனர். அத்வைதக் கருத்.துக்கள் அடங்கிய குர்ஆன் வசனங்களுக்கு

விளக்கமென்ன என்பதில் இவர்கள் விசேச கவனம் செலுத்துவதில்லை. அவற்றை அல்லாஹ் அறிந்தவன் என்பதோடு தங்கள் கருத்தை முடித்துக் கொள்கின்றனர். இதில் கருத்தைச் செலுத்தி மனம் குழம்புவதைவிட அல்லாஹ்வின் கட்டளைப் படி ஏவல் விலக்கலைக் கவனித்து இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளை நிறைவேற்றுவோம். மார்க்க விசயத்தில் இதுவே நமக்குப் போதும் என போதுமாக்கிக் கொள்கின்றனர்.

ஹக்குடைய உள்ளமை வேறு. படைப்பினங்களுடைய உள்ளமைவேறு. படைப்பினங்களுக்கு அன்னியமாக ஹக்கு இருக்கிறான் என்ற கொள்கையில் ஹக்கை வணங்குகிறார்கள் இவர்கள். மனிதனைப் பொறுத்தவரை இவர்கள் சித்தாந்தம் என்னவெனில், மனிதன் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்தால், அவன் மனிதனுக்கு நேர்வழி காட்டுவான். மனிதனது முயற்சி சுதந்திரமானது. மனிதனது ஜீவன் செய்யும் நன்மை, தீமை அதற்கே. மனிதன் நன்மை செய்தால் சுவர்க்கமும், தீமை செய்தால் நரகமும் அடைகிறான். இதனால்தான் இறைவன் திருமறையில் மனிதர்களுக்கு ஏவல், விலக்கலை உபதேசிக்கிறான். இல்லை என்றால் இறைவன் மனிதனுக்கு நன்மாராயம் கூறி இரட்சிக்கவோ, மனிதனின் தவறைக் கண்டிக்கவோ, அத்தவறின் காரணமாகத் தண்டிக்கவோ அவசியமில்லை என்று கருதுகின்றனர்.

**மனிதனது முயற்சி சுதந்திரமுடையது என்பதற்கு இஜாதியாக்கள் காட்டும் குர்ஆன் ஆதாரங்கள்:**

مَّا أَصَابَكَ مِنْ حَسَنَةٍ فَمِنَ اللَّهِ وَمَا أَصَابَكَ مِن سَيِّئَةٍ فَمِن نَّفْسِكَ

4:79 : "(மனிதர்களே) உனக்கு கிடைக்கும் எந்த நன்மையும் அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கிறது. இன்னும் உனக்கு ஏதாவது ஒரு தீங்கு ஏற்பட்டால் அது உன்னால்தான் வந்தது..."

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِن تَتَّقُوا اللَّهَ يَجْعَل لَّكُمْ فُرْقَانًا وَيُكَفِّرْ عَنكُمْ سَيِّئَاتِكُمْ وَيَغْفِرْ لَكُمْ وَاللَّهُ ذُو الْفَضْلِ الْعَظِيمِ

8:29 : "ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்வீர்களானால் அவன் உங்களுக்கு (நன்மை,தீமையைப்) பிரித்தறிந்து நடக்கக்கூடிய பண்பாட்டை அளிப்பான். இன்னும் உங்களை விட்டும் உங்கள் பாவங்களைப் போக்கி உங்களை மன்னிப்பான். ஏனெனில் அல்லாஹ் மகத்தான அருட்கொடையுடையவன்."

لَا يُكَلِّفُ اللَّهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا لَهَا مَا كَسَبَتْ وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ

2:286 : "அல்லாஹ் எந்த ஒரு ஆத்மாவிற்கும் அது தாங்கிக் கொள்ள முடியாத அளவு கஷ்டத்தைக் கொடுப்பதில்லை. அது சம்பாதித்ததின் நன்மை அதற்கே. அது சம்பாதித்ததின் தீமையும் அதற்கே..."

أَلَّا تَزِرُ وَازِرَةٌ وِزْرَ أُخْرَىٰ. وَأَن لَّيْسَ لِلْإِنسَانِ إِلَّا مَا سَعَىٰ. وَأَنَّ سَعْيَهُ سَوْفَ يُرَىٰ. ثُمَّ يُجْزَاهُ الْجَزَاءَ الْأَوْفَىٰ. وَأَنَّ إِلَىٰ رَبِّكَ الْمُنتَهَىٰ. وَأَنَّهُ هُوَ أَضْحَكَ وَأَبْكَىٰ. وَأَنَّهُ هُوَ أَمَاتَ وَأَحْيَا

53:38-44 : " (அதாவது) சுமக்கிறவன் பிரிதொருவன் சுமையைச் சுமக்கமாட்டான். இன்னும் மனிதனுக்கு அவன் முயல்வதல்லால் வேறில்லை. அன்றியும் நிச்சயமாக அவன் முயற்சி(யின் பலன்) பின் அவனுக்குக் காண்பிக்கப்படும். பின்னர் அதற்கு நிரப்பமான கூலியாக அவன் கூலி வழங்கப்படுவான். மேலும் உம் இறைவனின்பால்தான் இறுதி (மீட்பு) இருக்கிறது. அன்றியும் நிச்சயமாக அவனே சிரிக்க வைக்கிறான். அழச் செய்கிறான். இன்னும் நிச்சயமாக அவனே மரிக்கச் செய்கிறான். இன்னும் உயிர்ப்பிக்கிறான்."

الْيَوْمَ تُجْزَىٰ كُلُّ نَفْسٍ بِمَا كَسَبَتْ ۚ لَا ظُلْمَ الْيَوْمَ ۚ إِنَّ اللَّهَ سَرِيعُ الْحِسَابِ

40:17 : "அந்நாளில் ஒவ்வோர் ஆத்மாவும் அது சம்பாதித்ததற்கு கூலி கொடுக்கப்படும். அந்நாளில் எந்த அநியாயமும் இல்லை. நிச்சயமாக அல்லாஹ் கேள்விகணக்கு கேட்பதில் மிகவும் தீவிரமானவன்."

إِنَّ اللَّهَ لَا يَظْلِمُ النَّاسَ شَيْئًا وَلَٰكِنَّ النَّاسَ أَنفُسَهُمْ يَظْلِمُونَ

10:44 : " நிச்சயமாக அல்லாஹ் மனிதர்களுக்கு எவ்வித அநியாயமும் செய்வதில்லை. எனினும் மனிதர்கள் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொள்கிறார்கள்."

فَمَن تَابَ مِن بَعْدِ ظُلْمِهِ وَأَصْلَحَ فَإِنَّ اللَّهَ يَتُوبُ عَلَيْهِ ۗ إِنَّ اللَّهَ غَفُورٌ رَّحِيمٌ

5:39 : "எவரேனும் தம் தீய செயலுக்காக மனம் வருந்தி தம்மை சீர்திருத்திக் கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் (அவர்களின் தௌபாவை) ஏற்று மன்னிக்கிறான். நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்போனாகவும், பேரருள் கருணையுடையோனாகவும் இருக்கிறான்."

وَالَّذِينَ إِذَا فَعَلُوا فَاحِشَةً أَوْ ظَلَمُوا أَنفُسَهُمْ ذَكَرُوا اللَّهَ فَاسْتَغْفَرُوا لِذُنُوبِهِمْ وَمَن يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا اللَّهُ وَلَمْ يُصِرُّوا عَلَىٰ مَا فَعَلُوا وَهُمْ يَعْلَمُونَ

3:135 : "தவிர மானக்கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும் அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்கத்தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அவர்கள் மனப்பூர்வமாக மன்னிப்புத் தேடுவார்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும் அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் பாவ காரியங்களில் தரிபட்டு விழுந்து விட மாட்டார்கள்."

أُولَٰئِكَ جَزَاؤُهُم مَّغْفِرَةٌ مِّن رَّبِّهِمْ وَجَنَّاتٌ تَجْرِي مِن تَحْتِهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا ۚ وَنِعْمَ أَجْرُ الْعَامِلِينَ

3:136 : அத்தகையோருக்குரிய(நற்)கூலி அவர்களுடைய ரப்பிடமிருந்து மன்னிப்பும், சுவனபதிகளும் ஆகும். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டே இருக்கும். அவர்கள் அங்கே என்றென்றும் இருப்பர். நற்செயல்கள் செய்வோரின் பிரதிபலன் நன்மையே ஆகும்.“

يَوْمَ يَأْتِ لَا تَكَلَّمُ نَفْسٌ إِلَّا بِإِذْنِهِ ۚ فَمِنْهُمْ شَقِيٌّ وَسَعِيدٌ. فَأَمَّا الَّذِينَ شَقُوا فَفِي النَّارِ لَهُمْ فِيهَا زَفِيرٌ وَشَهِيقٌ. خَالِدِينَ فِيهَا مَا دَامَتِ السَّمَاوَاتُ وَالْأَرْضُ إِلَّا مَا شَاءَ رَبُّكَ ۚ إِنَّ رَبَّكَ فَعَّالٌ لِّمَا يُرِيدُ. وَأَمَّا الَّذِينَ سُعِدُوا فَفِي الْجَنَّةِ خَالِدِينَ فِيهَا مَا دَامَتِ السَّمَاوَاتُ وَالْأَرْضُ إِلَّا مَا شَاءَ رَبُّكَ ۖ عَطَاءً غَيْرَ مَجْذُوذٍ.

11:105-108 : “அந்த நாள் வரும்போது அவனுடைய அனுமதியின்றி எவரும் பேச இயலாது. இன்னும் அவர்களில் துர்ப்பாக்கியசாலிகளும் இருப்பர். நற்பாக்கியசாலிகளும் இருப்பர். துர்ப்பாக்கியசாலிகள் நரக நெருப்பில் எறியப்பட்டு இருப்பார்கள். அதில் அவர்களுக்கு பெரும் கூச்சலும்இ முனஙகலும்தான் இருக்கும். உம் இறைவன் நாடினாலன்றி வானங்களும் பூமியும் நீடிக்கும் காலமெல்லாம் அவர்கள் அந்த நரகத்திலேயே நிலைபெற்று விடுவார்கள். நிச்சயமாக உம் இறைவன் தான் நாடியவற்றை செய்து முடிப்பவன். நற்பாக்கியசாலிகளோ சுவனபதியில் இருப்பார்கள். உம் இறைவன் நாடினாலன்றி வானங்களும், பூமியும் நிலைத்திருக்கும் காலமெல்லாம் அவர்கள் அச்சுவனபதியிலேயே நிலைபெற்று விடுவார்கள். இது முடிவுறாத அருட்கொடையாகும்.“

குர்ஆன் லாஹிர் போதனைகளையும், அதற்கு இணக்கமான நபிகளின் ஹதீதுகளையும் தங்கள் கொள்கைக்கு ஆதாரமாக இவர்கள் எடுத்துக் கொண்டனர்.

**சுஜூதியாக்களின் கொள்கை**:

இனி சுஹூதியா என்ற வசிஷ்டாத்வைதிகளின் சித்தாந்தம் என்ன என்பதைக் கவனிப்போம். இவர்களும் துவைதிகளைப் போல் ஹக்குடைய உள்ளமை வேறு. கல்குடைய உள்ளமை வேறு என்ற கொள்கையுடையவர்களே. துவைதிகள் கேட்கும் கேள்விகளையே இவர்களும் தங்கள் சித்தாந்தத்திற்கு ஆதரவாகக் கேட்கின்றனர். ஹக்குடைய உள்ளமை மனிதனின் உயிருக்குள் வியாபகமாக(அந்தர்மியமாக) இருக்கிறது என்பதே இவர்களுடைய விசேஷ கொள்கையாகும். அவ்விதம் இருப்பதை வைத்து அவ்வுள்ளமையை மனிதனின் உள்ளமையாகக் கருத முடியாது என்பது இவர்களின் கொள்கை. மனிதனின் உயிரில் ஹக்குடைய உள்ளமை இருப்பதால் இறைவணக்கத்தில் மனிதன் உணர்விழந்த நிலையிலிருக்கையில் ஜீவனின் உள்ளமையில் ஹக்குடைய உள்ளமை பிரதிபலிக்கிறது. அதுசமயம் மனிதனின் உள்ளமை ஹக்குடைய உள்ளமை போல் தோற்றம் அளிக்கப்பட்டாலும், மனிதனின் உள்ளமை ஹக்கின் உள்ளமையாக ஆவதில்லை. எவ்வாறெனில், நெருப்பில்

இரும்பு இருப்பதால் நெருப்பைப் போன்று இரும்பு ஆன போதிலும் இரும்பு நெருப்பாக ஆவதில்லை. இரும்பு இரும்புதான். நெருப்பு நெருப்புதான். அதுபோல் நீ நீதான். அவன் அவன்தான். இதுவே சுஹூதிய்யாக்களின் கொள்கை. மனிதனின் உள்ளமையில் ஹக்கு அந்தர்மிய்யமாக இருக்கிறான் என்பதற்கு சுஹூதிய்யாக்கள் காட்டும் குர்ஆன் ஆதாரம் இதுவே.

اللَّهُ نُورُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ ۚ مَثَلُ نُورِهِ كَمِشْكَاةٍ فِيهَا مِصْبَاحٌ ۖ الْمِصْبَاحُ فِي زُجَاجَةٍ ۖ الزُّجَاجَةُ كَأَنَّهَا كَوْكَبٌ دُرِّيٌّ يُوقَدُ مِن
شَجَرَةٍ مُّبَارَكَةٍ زَيْتُونَةٍ لَّا شَرْقِيَّةٍ وَلَا غَرْبِيَّةٍ يَكَادُ زَيْتُهَا يُضِيءُ وَلَوْ لَمْ تَمْسَسْهُ نَارٌ ۚ نُّورٌ عَلَىٰ نُورٍ ۗ يَهْدِي اللَّهُ لِنُورِهِ مَن يَشَاءُ ۚ
وَيَضْرِبُ اللَّهُ الْأَمْثَالَ لِلنَّاسِ ۗ وَاللَّهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

24:35 : "அல்லாஹ் வானங்களுடையவும் பூமியினுடையவும் ஒளியாக இருக்கிறான். அவன் ஒளிக்கு உவமையானது: விளக்கு தன்னுள்ளே இருக்கும் ஒரு மாடத்தை போலாகும். அவ்விளக்கு ஒரு பளிங்கில் இருக்கிறது. நிச்சயமாக அப்பளிங்கு இலங்கும் நட்சத்திரத்தைப்போல் இருக்கிறது. முபாரக்கான –பாக்கியமிக்க ஸைத்தூன்(ஒலிவ)மரத்தி(ன் எண்ணெ)யினால் அது எரிக்கப்படுகிறது. (அந்த மரம்) அது கிழக்குத் திசையிலுள்ளதுமல்ல. மேற்குத் திசையிலுள்ளதுமல்ல. அதை நெருப்புத் தீண்டாத நிலைமையிலும், அ(ந்த ஒலிவத்)தின் எண்ணெய் பிரகாசம் அளிக்(க முடுகு)கிறது. ஒளி ஒளியின் மீது இருக்கிறது. அல்லாஹ் தான் நாடுபவரைத் தன் ஒளிக்கு வழி காட்டுகிறான். இன்னும் அல்லாஹ் மனிதர்களுக்குத் (தன் தன்மையை உணர்த்தும் பொருட்டு) இத்தகைய உவமைகளை விவரிக்கிறான். மேலும், அல்லாஹ் எல்லா பொருட்களையும் நன்கு அறிபவன்."

அடியார்களின் நன்மை, தீமையான செயல்கள் யாவும் இறைவன் நாட்டத்தால் நடப்பவை. அதில் அடியானுக்கு யாதொரு தொடர்புமில்லை என்ற கொள்கையுடையோர் "ஜபரிய்யாக்கள்".

அடியார்களின் நன்மை, தீமையான செயல்களுக்கு அவர்களே பொறுப்பு. இவற்றில் இறைவன் நாட்டம் சம்பந்தப்படவில்லை என்ற கொள்கையுடையோர் "கத்ரிய்யாக்கள்".

மனிதனது ஜீவன் சுதந்திரமுடையது என்ற கொள்கையுடைய கத்ரியாக்களும், மனிதனின் ஜீவன் சுதந்திமற்றது என்ற கொள்கையுடைய ஜபரிய்யாக்களும், தங்கள் தங்கள் கொள்கையைப் பலமாக ஸ்தாபித்து அதனடிப்படையிலேயே தங்கள் வணக்க வழிபாடுகளை அமைத்துக் கொண்டனர். பனூ உமையாக்கள் ஆட்சிகாலத்தில் இவ்விரு தரப்பாரின் கொள்கை அரசியல் இயக்கமாகவே மாறியது. இவ்வாறு இஸ்லாமியர்களிடையே இவ்விரு தரப்பாரின் தத்துவங்களும் மோதிக் கொண்டிருக்கையில் முஹம்மது கஸ்ஸாலி என்ற ஞானசூரியன் உதயமாயிற்று. இவ்விரு சாராரின் தத்துவங்களும் அவர்களது சிந்தனையைத் தூண்டிற்று. அவர்களது சிந்தனையில் பிறந்த பிரதான கேள்விகள் இரண்டு. மனிதனது ரூஹு (உயிர்) சுதந்திரமுடையது என்றால் களாகதிர் எதற்கு? என்ற ஜபரிய்யாக்களின் கொள்கையும், மனிதனது ரூஹு சுதந்திரமற்றது என்றால் ஏவல், விலக்கல் எதற்கு? என்ற கத்ரிய்யாக்களின்

கொள்கையும் அவர்கள் சிந்தனையைத் தூண்டியது. இவ்விரு கேள்விகளையும் பிரதானமாக எடுத்துக் கொண்ட கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இருசாராரின் தத்துவங்களையும் தீர்க்கமாக ஆராய்ந்தார்கள்.

## அத்தியாயம் 3

### மனிதப் படைப்பின் விளக்கம்

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் படைத்தது போலவே ஆதம் அவர்களின் சந்ததிகளாகிய மனிதர்களை அல்லாஹ் படைத்தான் என்பதை திருக்குர்ஆன் வசனங்கள் மெய்ப்பிக்கின்றன.

وَبَدَأَ خَلْقَ الْإِنسَانِ مِن طِينٍ. ثُمَّ جَعَلَ نَسْلَهُ مِن سُلَالَةٍ مِّن مَّاءٍ مَّهِينٍ. ثُمَّ سَوَّاهُ وَنَفَخَ فِيهِ مِن رُّوحِهِ ۖ وَجَعَلَ لَكُمُ السَّمْعَ وَالْأَبْصَارَ وَالْأَفْئِدَةَ ۚ قَلِيلًا مَّا تَشْكُرُونَ.

32:7-9 : "..... இன்னும் அவன் மனிதப் படைப்பைக் களிமண்ணிலிருந்து ஆரம்பித்தான். பிறகு நழுவும் (அற்பத்)துளியாகிய (இந்திரியச்) சத்திலிருந்து அவனுடைய சந்ததியை உண்டாக்கினான். பிறகு அவன் அதைச் சரி செய்து, அதனுள்ளே தன் ரூஹிலிருந்தும் ஊதினான்..."

மனிதப் படைப்பின் ரகசியத்தைக் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நன்கு ஆராய்ந்த போது, அவர்களுக்குப் பின் கண்ட விளக்கங்கள் கிடைத்தன."மனிதனுக்குத் தன் ரூஹிலினின்றும் ஊதினேன்" என்று அல்லாஹ் சொல்வதால் அல்லாஹ்வின் சுயமான அறிவைப் பெற்ற ரூஹு மனிதனில் இருக்கிறதென்றும், மனிதனின் சரீரத்தை களிமண்ணிலிருந்து ஆரம்பித்தேன் என்று அல்லாஹ் சொல்வதால் சுயமான அறிவினிலின்றும் பிரதிபலித்த "குன்" என்ற கட்டளையால் ஆன தோற்றப்பட்ட அஞ்ஞானமாகிய ரூஹு ஒன்று மனிதனில் இருக்கிறதென்றும், முந்திய ஞானமாகிய ரூஹு அகண்டமென்றும், பிந்திய அஞ்ஞானமாகிய ரூஹு கண்டமென்றும் அவர்கள் ஆராய்ந்து இன்சான் அகண்டத்தையும், கண்டத்தையும் பொருந்தியவன் என்று முடிவு செய்தார்கள். உலகத்தில் எந்த வஸ்துவையும் அல்லாஹ் காரணமில்லாமல் படைக்கவில்லை என்பதைக் குர்ஆனில் அல்லாஹ் தெளிவுப்படுத்தியுள்ளான்.

وَمَا خَلَقْنَا السَّمَاوَاتِ وَالْأَرْضَ وَمَا بَيْنَهُمَا لَاعِبِينَ. مَا خَلَقْنَاهُمَا إِلَّا بِالْحَقِّ وَلَٰكِنَّ أَكْثَرَهُمْ لَا يَعْلَمُونَ

44:38-39 : "மேலும் வானங்களையும், பூமியையும் இவ்விரண்டுக்குமிடையே உள்ளவற்றையும் விளையாட்டுக்காக நாம் படைக்கவில்லையெனினும் அவர்களில் பெரும்பாலோர்(இதை) அறியமாட்டார்கள்."

ஆகையால் மனிதன் எக்காரணத்திற்காக ஞானமாகிய அகண்டத்தையும், அஞ்ஞானமாகிய கண்டத்தையும் கொண்டு படைக்கப்பட்டனர் என்பதை மனிதன் நன்கு சிந்திக்க வேண்டும். மலக்குகள் போல் ஒளி மயமாய்ப் படைக்கப்படாமல், இருண்ட பாகத்தையுடைய அஞ்ஞானமாகிய ஜடத்தை ஏன் மனிதனில் அமைக்கப்பட வேண்டும்? இவ்விதம் அல்லாஹ் மனிதனைப் படைத்தது வீணுக்கல்ல என்பதை உணர வேண்டும். பிரபஞ்சத்தின் ஒவ்வோர் அணுவும் ஹக்குடைய சில பண்புகளை பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்கிறது. மலக்குகள் பிரகாசமான பாகத்தை மட்டும்பெற்றிருப்பதால் அவர்கள் பாவம் செய்வதில்லை. ஜடப் பொருட்கள் அஞ்ஞானமாகிய இருண்ட பாகத்தை மட்டும் பெற்றிருப்பதால் அவைகள் பாவத்தை விட்டும் தப்புவதில்லை. மனிதனோ ஞானம், அஞ்ஞானமாகிய இரு பாகங்களுடன் மலக்குகளின் அம்சத்தையும் பெற்றிருப்பதால் அவன் முக்குணப் பண்புகளை அடையப் பெற்றவனாயிருக்கிறான்.

அதாவது தமோ,ரஜோ, ஸத்வ குணங்களை அடைந்திருக்கிறான். தமோ குணமாகிய சுபாவ குணம் எல்லோருக்கும் ஞானம் அடைவதற்கு முன் இயற்கையாக ஏற்படும். இதனால் தீங்கைத் தவிர நன்மையுண்டாகாது. ரஜோ குணமாகிய அறிவின் குணமோ புத்தியையும், ஞானத்தையும் அனுசரித்து நடக்காதவரையில் உண்டாகாது. இது நன்மையின் பேரில் (ஆசையுடையதாகவும்) அபேட்சையாகவும், தீமையின்பேரில் வெறுப்புள்ளதாகவும் இருக்கும். சிலசமயம் சுபாவ குணத்தின் மூர்க்கத்தால் ஏமாந்து சிறு குழந்தையைப் போல் தடுமாறி பாவத்தில் விழுந்து தன்னை நொந்து கொள்ளும். ஸத்வ குணமாகிய ஆத்ம குணமோ, தன் உள்ளமையை கடவுள் உள்ளமை என்றும், தன் தத்துவத்தை கடவுள் தத்துவம் என்றும், தன்செயலை கடவுள் செயலென்றும் அறிந்திருக்கும். இதனால் தீங்குண்டாகாது. சுபாவ குணமாகிய தமோ குணத்தை தனக்கு அடிமைப்படுத்தி பாவம் செய்யாத மலக்கின் குணமாகிய அறிவின் குணத்தைக் கடைப்பிடிக்க மனிதனுக்கு அல்லாஹ் ஏவல், விலக்கலை குர்ஆன் மூலம் விவரித்து மனிதன் அதனை கடைப்பிடிக்க வேண்டுமென்ற நியதியை ஏற்படுத்தினான். தமோ குணம் ஒழிக்கப்பட்டால் சுவர்க்கம் சிந்திக்கக் கூடியதில்லை. தமோ குணத்தை ஒழிக்க ஒருவன் பாடுபடுவது அல்லாஹ்வின் பாதையில் அவர் போர் புரிவதாகும். அதற்கு பொறுமையே (போர்) ஆயுதமாகும். இது பற்றி திருக்குர்ஆனில் கூறப்படுவதாவது:-

أَمْ حَسِبْتُمْ أَن تَدْخُلُوا الْجَنَّةَ وَلَمَّا يَعْلَمِ اللَّهُ الَّذِينَ جَاهَدُوا مِنكُمْ وَيَعْلَمَ الصَّابِرِينَ

3:142 : "உங்களில் அல்லாஹ்வின் பாதையில் உறுதியாகப் போர் புரிபவர்கள் யார்? என்றும் (அக்காலை) பொறுமையைக் கடைப்பிடிப்பவர்கள் யார்? என்றும் அல்லாஹ் (பரிசோதித்து) அறியாமல் நீங்கள் சுவனபதியில் நுழைந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா?"

தமோ குணத்தை ஒழிக்க வெளிரங்க வணக்கம் தேவை. ஆன்ம குணத்தில் தரிபட சிர்ரான வணக்கம் தேவை. தமோ குணத்தை ஒழிக்க குர்ஆன் ளாஹிர் போதனைகளையும் ஆன்ம குணத்தில் தரிபட குர்ஆன் பாதின் போதனைகளையும் மனிதன் ஏற்று அதன்படி நடக்க வேண்டும். தமோ குணத்தை அழித்த மனிதன் அர்ஷைச் சுமக்கும் மலக்காக இருக்கிறான்.

அவன் ஆன்ம குணத்தில் தரிபடும் போது பிரம்ம நிலையை அடைகிறான். மனிதன் ஹக்கினுடைய சகல பண்புகளையும் பொருந்திய சம்பூரணக் கண்ணாடியாக இருக்கிறான். பார்ப்பவனின் முகம் கண்ணாடியில் தோற்றமளிப்பதற்கு மிக இருண்ட பூச்சுகளை மனிதன் பெற்றிருக்கிறான். அதனாலே அவன் ஓர் தகுதி வாய்ந்த சம்பூரண கண்ணாடியாக இருக்கிறான்.

## அத்தியாயம் 4

### ரூஹின் விளக்கம்

படைக்கப்படாத ஆத்மாதான் ஹகீகத்து முஹம்மதி என்ற வஹ்தத் ஆகும். இது ரூஹுல் குத்ஸி என்றும், பரிசுத்த ஆவி என்றும், நூரே முஹம்மதிய்யா என்றும் அழைக்கப்படுகிறது. அதற்கடுத்த நிலையே ஹகீகத்து இன்ஸானி என்ற ரூஹுல் இன்ஸானி (வாஹிதிய்யத்து) ஆகும். படைக்கப்பட்ட ஆன்மா ஆலம் அர்வாஹு என்னும், ஆன்ம லோகம், ஆலம் மிதால் என்னும் சூட்சும லோகம், ஆலம் அஜ்ஸாம் என்னும் ஜட லோகமாகும். படைக்கப்படாத ஆன்மா சர்வ வியாபகமானது. அது பாகமேற்காத ஜௌஹரான ஒரு ஆதாரப் பொருள். அது தனக்கோர் தலமென்பதும் திசையென்பதும் இல்லாமல் சுத்தமாயிருக்கிறது. அது சரீரத்திற்கு உள்ளேயிருப்பதுமல்ல. புறத்தேயிருப்பதுமல்ல. சரீரத்துடன் சேர்ந்து இருப்பதுமல்ல. பிரிந்திருப்பதுமல்ல. அது காணமுடியாதது. எதுவும் தீண்ட முடியாதது.

படைக்கப்பட்ட, வியஷ்டியான, ஒற்றைப்பட்ட ஒவ்வொரு ஆன்மாக்களும் படைக்கப்படாத, சர்வ வியாபகமான ரூஹுல் குத்ஸியின் பிரதிபிம்பமாகும். இவ்விரு ரூஹுகளின் தன்மையாவன:-.

| படைக்கப்படாத ஆன்மா(பரமாத்மா) | படைக்கப்பட்ட ஆன்மா(ஜீவாத்மா) |
|---|---|
| வாஜிபுல் உஜூது ஆகிய அத்தியாவசிய உள்ளமை உடையது. | மும்கினுல் உஜூது ஆகிய இடம்பாடான உள்ளமை உடையது. |
| ஸத்வ குணமுடையது. | தமோ குணமுடையது. |
| பந்தத்திற்குக் கட்டுப்படாத சுதந்திரமான ரூஹு கட்டளை பிறப்பிப்பது. சத்து, சித்து, ஆனந்தமானது. | பந்தத்திற்குக் கட்டுப்பட்ட சுதந்திரமற்ற ரூஹு. அடிமை விண்ணப்படம் செய்வது, அசத்து, ஜடம், துக்கமானது. |
| நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடற்றது. | இத்தனையும் உடையது. |
| நித்தியானந்த சுகத்தைப் பெற்றது. | தன் செயலுக்கேற்ப சுவர்க்கத்தையோ, நரகத்தையோ அடைவது. |
| சர்வ வியாபகமானது. சரீரத்தில் பாகமேற்காதது. | கண்டமானது. சரீரத்தில் பாகம் ஏற்பது. |
| மனிதனுக்கு மட்டும் ஹக்கினால் ஊதப்பட்டது. | சகல ஜீவ ராசிகளுக்கு பொதுவானது. |

| | |
|---|---|
| மெய்ஞ்ஞானமானது.,வித்தேகமானது. | அஞ்ஞானமானது முத்தேகமானது. |
| தன்னை அறிய நாடியபோது முச்சுடரானது. | தன்னை அறிய நாடியபோது மும்மலமானது. |
| மஹ்ஷரில் ரப்பாக இருந்து கேள்வி கேட்பது. | மஹ்ஷரில் அப்தாக நின்று விடையளிப்பது. |

காலம், இடம், காரண காரியம் இவற்றிற்குக் காரணமான மனதைக் கடந்து நாம ரூபமில்லாமல் ஆத்மா இருப்பதால் ஆன்மா எல்லையற்றது. ஆன்மா எல்லையற்றதானால் அது ஒன்றாகத்தான் இருக்க முடியும். எனவே, பரமாத்மா, ஜீவாத்மா என்பதில்லை. பரமாத்மாவின் பிரதிபலிப்பே ஜீவாத்மா என்று அத்வைதிகள் கருதுகின்றனர்.

பரமாத்மா, ஜீவாத்மாக்கள் என்ற இரண்டில் சுதந்திரமுள்ள பொருள் பரமாத்மா. ஜீவாத்மாக்கள் பல. எண்ணற்ற ஜீவாத்மாக்களில் உயிருக்கு உயிராய் ஏக ஆத்மா வியாபித்திருக்கிறது என்று விஷிஷ்டாத்வைதிகள் கருதுகின்றனர். பரமாத்மா, ஜீவாத்மா இவைகள் தனித்தனி உள்ளமை உடையது என்று துவைதிகள் கருதுகின்றனர்.

பரமாத்மா, படைக்கப்படாத ரூஹாகவும், ஜீவாத்மா படைக்கப்பட்ட ரூஹாகாகவும் இருக்கிறது. பரமாத்மா, ஜீவாத்மா இவை இரண்டும் சேகரமான தொகுப்பே இன்ஸானாகும். ஆன்மாவின் குணமாகிய ஸத்வ குணத்தில் தரிபட்டவனே இன்ஸான் காமிலாகும். இதனை அறிய வேண்டுமானால் இறைவன் தன்னை அறிய ஏற்படுத்திய படித்தரங்களை விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஹக்கு தன்னையே தான் அறியாதிருந்த நிலை தாத்து. தன்னை அறிய ஹக்கு நாடியபோது தன்னை மட்டும் தான் உணர்ந்த ஸ்தானம் அஹதிய்யத்து. தன்னில் தான் நோட்டடமிட்டு தன்னில் சகலமும் அடங்கியிருக்கக் கண்ட பதவி வஹ்தத் என்ற முதற்குறிப்பு. வஹ்தத்தாகிய ஏக அறிவில் தரிபட்டிருந்த பண்புகளை பிரித்தரிந்த நிலையே இரண்டாம் குறிப்பாகிய “வாஹிதிய்யத்து“ ஆகும். ஹக்கினால் அறியப்பட்டும், ஹக்கின் அறிவில் தரிப்பட்ட பண்புகளில் அறியப்படாததுமான இம்மூன்று ஸ்தானமும் படைக்கப்படாதது. பண்புகள் தங்களை வெளிப்படையாக பிரிவு பிரிவாகக் கண்ட நிலைதான் ஆலம் அர்வாஹு என்னும் ஆன்ம லோகம்.“ஆலம்மிதால்“ என்னும் சூட்சும லோகம், ஆலம் அஜ்ஸாம் என்னும் ஜட லோகம். இம் மூன்றும் படைக்கப்பட்டது.

பிரபஞ்சத்தில் தோன்றிய ஒவ்வொரு வஸ்துவும் ஒரு பண்பின் கோலம். இந்த பிரபஞ்சம் பூராவும் பல பண்புகளின் கோலம். படைக்கப்படாத ஏக ஆன்மாவில் சிபாத்து ஆகிய பண்புகள் ஒன்றினுள் மற்றொன்று மறைந்திருக்கிறது. பிரபஞ்சமாக வெளியாகிய “கத்ரத்து“ ஆகிய அநேகத் தன்மையில் பண்புகள் ஒவ்வொன்றும் தங்கள் பண்புகளை வெளிப்படுத்தி ஒன்றோடொன்று போரிடக் கூடிய அளவுக்கு எதிரிடையாக இருக்கின்றன. ஜீவாத்மா, தமோ குணத்தையுடையதாகவும், பரமாத்மா ஸத்வ குணத்தையுடையதாகவும் இருக்கிறது. இன்ஸான்

ஜடத்தை இயக்கும் ஜீவத்மா தமோ குணத்தையுடையது. இதனை வெல்வதற்கு இன்ஸான் வேதத்தில் சொல்லப்பட்ட ஏவல், விலக்கல்களை கடைப்பிடித்தாக வேண்டும்.

ஜீவாத்மா என்பது இல்லை என்றால் வேதங்களில் சொல்லப்பட்ட ஏவல், விலக்கல் யாருக்கு என்ற கேள்வி ஏற்படும். சரிகை, கிரிகை தேவையற்றது என்பதாகிவிடும்.

ஹக்கினுடைய வெளிப்பாடே ஏக ஆன்மா. ஏக ஆன்மாவில் தரிபட்டிருந்த பண்புகளின் வெளிப்பாடே பிரபஞ்சம். ஏக ஆன்மாவில் முரண்பட்ட பண்புகளின் குணங்கள் அமுக்கப்பட்டு ஏக ஆன்மாவின் குணமாகிய ஸத்வ குணமே வெளியாகிறது.

வெளியான பிரபஞ்சத்தில் ஏக ஆன்மாவின் குணம் மறைக்கப்பட்டு முரண்பட்ட பண்புகளின் குணம் வெளியாகிறது. இங்கு தமோ குணமே வெளிப்படுகிறது.

பரமாத்மா, ஜீவாத்மாவின் தொகுப்பே இன்ஸான் ஆகும். இன்ஸானின் சரீரம் ஜீவாத்மாவின் குணத்தை வெளிப்படுத்துகிறது. இன்ஸானில் ஊதப்பட்ட ரூஹு ஸத்வ குணத்தை பொருந்தியது. ஏக ஆத்மாவில் தரிபட்டிருந்த பண்புகளே கோலங்களாகியிருப்பதால் ஜீவாத்மாவுக்குத் தனி உள்ளமை என்பதில்லை.

இஸ்லாம் துவைத கருத்தை மட்டும்தான் உடையது. அத்வைத கருத்தோ, விஷிஷ்டாத்வைத கருத்தோ இஸ்லாத்தில் இல்லை. ஆகையால் ஜீவாத்மா, பரமாத்மா என்று இரு ஆத்மாக்கள் இல்லை. இருப்பது ஜீவ ஆத்மாவே. அதுவே அப்து. அதற்கு இறைவன் ரப்பு. இஸ்லாத்தில் ஜீவாத்மா, பரமாத்மா என்று எங்கும் காணப்படவில்லை. சூபிஸம் என்பது இஸ்லாத்தில் இல்லை. இஸ்லாம் ஏகத்துவத்தைப் போதிக்கிறது என்றால், ஏக இறைவன் ஒருவனே வணக்கத்திற்குரியவன் என்பதைத்தான் இஸ்லாம் போதிக்கிறதே அல்லாது இறைவன் ஏகமாய் இருக்கிறான் என்ற அத்வைதக் கொள்கையையோ, இறைவன் பிரபஞ்சத்தில் ஊடுருவி இருக்கிறான் என்ற விசிஷ்டாத்வைத கொள்கையையோ இஸ்லாம் போதிக்கவில்லை. குர்ஆனில் அவ்வித கருத்துக்கள் பிரதிபலிக்கவில்லை என்று முஸ்லிம்களில் பெரும்பாலோர் நம்பியுள்ளனர்.

இஸ்லாத்தில் அத்வைதக் கொள்கையை "வஹ்தத்துல் வுஜூது" உள்ளமைப் பொருள் ஒன்று அழைக்கப்படுகிறது. விஷிஷ்டாத்வைதக் கொள்கையை **"வஹ்தத்துஷ் ஷுஹூது"** தரிசனப் பொருள் ஒன்று என்று அழைக்கப்படுகிறது.

முதலாம் கொள்கையைப் பின்பற்றுவோர் வுஜூதியாக்கள் என்றும், இரண்டாம் கொள்கையைப் பின்பற்றுவோர் சுஹூதியாக்கள் என்றும், துவைதக் கொள்கையைப் பின்பற்றுவோர் இஜாதியாக்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

வுஜூதிய்யா, சுஹூதிய்யா ஆகிய இரு கொள்கையை மொத்தத்தில் "**சூபிஸம்**" அல்லது "**தஸவ்வுபு**" என்று அழைக்கப்படுகிறது. இக்கொள்கையை ஏற்காத துவைத சித்தாந்திகள் ஆகிய இஜாதியாக்கள் இக்கொள்கையை பித்அத் -புதுமையை புகுத்துதல் என்று சொல்லி

இக்கொள்கையை இஸ்லாமிய அனுஷ்டான முறையாகிய ஷரீஅத்திற்கு மாற்றமானது என்று கருதுகின்றனர்.

நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறைவிற்கு 500 ஆண்டுகளுக்குப் பின்னர் முஹிய்யித்தீன் இப்னு அரபி என்பவரால் இந்த சூபிஸம் இஸ்லாத்தில் உண்டாக்கப்பட்டதாக இஜாதியாக்கள் கருதுகின்றனர். இக்காரணங்களை மேற்கோள்காட்டி இஜாதியாக்கள் சூபிஸக் கொள்கையை ஏற்பதில்லை.

சூபிஸக் கொள்கை இஸ்லாத்தில் இருக்கிறது என்பதற்கு சூபியாக்கள் கீழ்க்கண்ட தெய்வத்திரு வசனங்களை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

هُوَ الْأَوَّلُ وَالْآخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ ۖ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

குர்ஆன்: 57:3 : " முந்தியவனும் அவனே, பிந்தியவனும் அவனே, பகிரங்கமானவனும் அவனே, அந்தரங்கமானவனும் அவனே. மேலும் அவன் அனைத்துப் பொருட்களையும் நன்கு அறிந்தவன்."

وَلِلَّهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ ۚ فَأَيْنَمَا تُوَلُّوا فَثَمَّ وَجْهُ اللَّهِ ۚ إِنَّ اللَّهَ وَاسِعٌ عَلِيمٌ

2:115 : " கிழக்கும், மேற்கும் அல்லாஹ்வுக்கே சொந்தம். நீங்கள் எந்தப் பக்கம் திரும்பினாலும் அல்லாஹ்வின் முகமே உள்ளது. நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் சூழ்ந்திருப்பவன். எல்லாம் அறிந்தவன்."

أَلَا إِنَّهُمْ فِي مِرْيَةٍ مِّن لِّقَاءِ رَبِّهِمْ ۗ أَلَا إِنَّهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيطٌ

41:54 : "அறிந்து கொள்க. நிச்சயமாக அவர்கள் தங்கள் இறைவனை சந்திப்பது குறித்து சந்தேகத்திலிருக்கிறார்கள். அறிந்து கொள்க. நிச்சயமமாக அவன் எல்லாப் பொருட்களையும் சூழந்து இருக்கிறான்."

اللَّهُ نُورُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ ۚ

24:35 : "அல்லாஹ் வானங்களுடையவும், பூமியினுடையவும் ஒளியாக இருக்கிறான்."

وَلِلَّهِ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ ۚ وَكَانَ اللَّهُ بِكُلِّ شَيْءٍ مُّحِيطًا

4:126 : " வானங்களுடையவும், பூமியில் உள்ளவை யாவும் அல்லாஹ்வுக்கே சொந்தம். மேலும் அல்லாஹ் எல்லாப் பொருட்களையும் சூழ்ந்து அறிபவனாக இருக்கிறான்."

அல்லாஹ் எல்லாப் பொருட்களையும் சூழ்ந்து அறிபவனாக இருக்கிறான் என்று குர்ஆனில் வருகிற தெய்வத் திருவசனங்களுக்கு அத்வைதிகள் கொடுக்கும் விளக்கம் என்னவென்றால், அல்லாஹ் வஸ்துக்களை சூழ்ந்திருக்கிறான் என்றால், வஸ்து வேறு அல்லாஹ் வேறு என்பதல்ல. இந்த சூழ்தல் தண்ணீரானது அலைகளையும், பனிகளையும், மலைச்சாரல்களையும் இன்னும் இதுபோல் ஆனவற்றையும் சூழ்ந்திருப்பது போன்றது என்பதாகும். அல்லாஹ் வஸ்துக்களை சூழ்ந்திருக்கிறான் என்ற தெய்வ திருவசனத்திற்கு விஷிஷ்டாதிவைதிகள் கொடுக்கும் விளக்கம் என்னவென்றால், அல்லாஹ் வஸ்துக்களை சூழ்ந்திருக்கிறான் என்றால் அல்லாஹ் எல்லா வஸ்துவிலும் இறங்கி வஸ்துவாகிவிட்டான் என்பதல்ல. வஸ்துக்களில் ஊடுருவி இருக்கிறான் என்பதுதான் பொருள் என்கிறார்கள்.

இந்தத் தெய்வத் திருவசனத்திற்குத் துவைதிகள் கொடுக்கும் விளக்கம் என்னவென்றால், அல்லாஹ் வஸ்துவாகவும் இல்லை. வஸ்துக்களில் ஊடுருவவும் இல்லை. வஸ்துக்களை வட்டுத் தனித்தே இருக்கிறான். அவனது அறிவு தான் வஸ்துக்களை சூழ்ந்து அறிகிறது என்கிறார்கள்.

ஸூபிஸக் கொள்கையை ஏற்ற வுஜூதியாக்கள், தங்களை தேகத்தின் அளவில் பார்ப்பதேயில்லை. அறிவு மயமாகவே பார்க்கிறார்கள். ஹக்குடைய பிரதிபலிப்பு அறிவு. அறிவின் மூலம் ஹக்கு. எனவே நமக்கு அந்நியமாய் ஹக்கில்லை. ஹக்கிற்கு அந்நியமாய் நாமில்லை. சரீரம் நாம் போர்த்தும் சட்டை என்ற சித்தாந்தத்தை வுஜூதியாக்கள் கடைபிடிக்கிறார்கள். ஹக்குடைய நிழல் நாம். ஹக்கின் நிழலாகிய நம் சரீரத்தை ஹக்கு சூழ்ந்திருக்கிறான் என்ற சித்தாந்தத்தை சுஹூதியாக்கள் கடைபிடிக்கிறார்கள். ஹக்கு வேறு, கல்கு வேறு என்ற சித்தாந்தத்தை இஜாதியாக்கள் கடைப்பிடிக்கிறார்கள்.

உண்மையை நம்புவது பக்தி. உண்மையை அறிவது ஞானம். உண்மையாக என்றும் இருக்கும் இறைவனை அறிவதுதான் ஞானமார்க்கம். அவனை இருப்பதாக நம்புவது பக்தி மார்க்கம். வல்ல இறைவன் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் படைத்து தன்னில் நின்றும் ரூஹை ஊதியபின் வானவர்களை ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சாஷ்டாங்கம் செய்யும்படி ஏவினான்.

وَإِذْ قَالَ رَبُّكَ لِلْمَلَائِكَةِ إِنِّي خَالِقٌ بَشَرًا مِّن صَلْصَالٍ مِّنْ حَمَإٍ مَّسْنُونٍ. فَإِذَا سَوَّيْتُهُ وَنَفَخْتُ فِيهِ مِن رُّوحِي فَقَعُوا لَهُ سَاجِدِينَ

குர்ஆன் 15:28,29 : "(நபியே) உம்முடைய ரப்பு மலக்குகளிடம் "ஓசை தரும் கருப்பான அளர் மண்ணிலிருந்து மனிதனை நாம் படைக்கப் போகிறேன்" என்றம் அவருக்கு நான் செளவையாக உருவாக்கி, அவரில் என் ஆவியிலிருந்து ஊதியதும் "அவருக்கு சிரம்பணியுங்கள்" என்றும் கூறியதை (நினைவு கூறுவீராக!)

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஊதிய இதே பரிசுத்த ஆவியை மனிதனுக்கும் ஹக்கு ஊதியுள்ளான்.

ثُمَّ جَعَلَ نَسْلَهُ مِن سُلَالَةٍ مِّن مَّاءٍ مَّهِينٍ. ثُمَّ سَوَّاهُ وَنَفَخَ فِيهِ مِن رُّوحِهِ

“மனிதப் படைப்பை களிமண்ணிலிருந்து ஆரம்பித்து, இந்திரியச் சத்திலிருந்து அவனுடைய சந்ததியை உண்டாக்கி பின் அதனில் தன் ரூஹிலிருந்து ஊதியதாக குர்ஆன் 32:8,9 வசனங்களில் அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். ஹக்கு தன்னின்றும் மனிதனுக்கு ஊதிய இந்த பரிசுத்த ஆவியின் மூலம் ஹக்கை விளங்கிக் கொள்வதே ஞானமாகும். ஹக்கை மனிதன் அறிந்து கொள்வதற்கே இந்த பரிசுத்த ஆவியை ஹக்கு மனிதனுக்கு ஊதியுள்ளான். இதுபற்றி சிந்திக்காதவர்கள் சிந்திப்பதில் அக்கறை எடுத்துக் கொள்ளாதவர்கள் இஸ்லாத்தில் சூபிஸம் இல்லை என்கிறார்கள்.

இறைவன் உலகில் படைத்த படைப்புகளை ஆறு அறிவாகப் பிரிக்கலாம்.

1. ஓரறிவு உள்ளது தாவர வர்க்கம். இந்த உயிர்களுக்கு ஊறு என்றும் ஒரு புலன் அறிவு உண்டு.

2. ஈரறிவு உள்ளது. சங்கு, சிப்பி, நத்தை போன்ற உயிர்கள். இவைகளுக்கு ஊறு, சுவை என்ற இரண்டு புலனறிவுகள் உண்டு.

3. மூவறிவு உள்ளது. எறும்பு, கரையான் போன்ற உயிரினங்கள். இவைகளுக்கு ஊறு, சுவை, நாற்றம் என்று மூன்று அறிவுகள் உண்டு.

4. நான்கறிவுள்ளது. ஈ, வண்டு போன்ற உயிர்கள். இவைகளுக்கு ஊறு, சுவை, நாற்றம், ஒளி என்ற நான்கு புலன் அறிவுகள் உண்டு.

5. ஐயறிவுகள் உள்ளது. மிருகம், பறவை போன்ற உயிர்கள். இவைகளுக்கு ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை என்ற ஐந்து புலன் அறிவுகள் உண்டு.

6. ஆறறிவு உள்ளவன் மனித இனம். மேற்சொல்லப்பட்ட ஐந்து அறிவுடன் நன்மை, தீமைகளை பகுத்தறியும் பகுத்தறிவைப் பெற்றவன்.

மனிதனுக்கு இதற்குமேல் அறிவு இல்லை என்றே மக்களில் பெரும்பாலோர் நம்பியுள்ளனர். வல்ல இறைவன் மனிதனுககு பிரத்தியேகமாக ஊதிய பரிசுத்த ஆவியாகிய படைக்கப்படாத ரூஹை விளங்கிக் கொண்டவன் பேரறிவில் தன்னை தரிபடுத்தித் தன்னை நாமரூபமற்றவனாக்கி எங்கும் இலங்கித் துலங்கிப் பிரகாசிக்கும் பேரறிவாகிய சுகாநீத அறிவாகத் தன்னைக் கண்டு கொள்வான். அந்நிலையில் தன்னை தேகத்தின் அளவில் கண்டு கொள்ளாமல் தன்னை எல்லையற்றவனாகக் காண்பான். இந்நிலை அடைந்தவனே பூரண ஞானி. பூரண ஞானி தான், இன்சான் காமில் என அழைக்கப்படுகிறான். இன்சான் காமிலைத்தான் அல்லாஹ் தன் தெய்வத் திருமறையில் “இன்னி ஜாயிலுன் பில் அர்னி கலிபா“ பூமியில் என்னுடைய பிரதிநிதி, என்று சிறப்பித்து அழைக்கிறான். அந்நிலை அடைவதற்கே அல்லாஹ் மனிதனை படைத்தான். அதனை விளங்கிக் கொள்ள ஜாக்கிரம்,

சொப்பனம், சுஷுத்தி, துரியம், துரியாதீதம், அதீதம் என்ற ஞான பூமியின் ஆறுநிலைகளை ஒருவன் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆறா தாரங்கள் ஆறாகும்

ஆஞ்சையில் அறிவு விழிப்பாகும்

ஆஞ்சையில் அறிவு ஹயாத்தானால்

அவரே இன்சான் காமிலடி

அவர் சிர்ருள் இன்சான் ஆகுமடி.

## அத்தியாயம் 5

### மனிதனுக்கு தௌபாவின் அவசியம்

மனிதனுக்கு முன்மாதிரியாக நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் படைக்கப்பட்டார்கள். ஆகையால் மனிதர்களில் யாரும் பாவம் செய்யாதிருக்க முடியாது என்பது கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கருத்தாகும். ஆகையால் தௌபாவை விட்டுவிட எந்த மனிதனுக்கும் வழியில்லை. ஏனெனில் படைத்தது முதல் கடைசிவரையில் பாவம் செய்யாதிருப்பது மலக்கின் குணம். வயது முழுவதும் பாவத்திலும், விரோதத்திலும் மூழ்கியிருப்பது ஷெய்த்தானின் குணம். செய்த பாவங்களுக்காகத் தௌபாச் செய்து, பாவ காரியத்தை விட்டு நீங்கி வணக்கவழியில் திரும்புவது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் குணமாகயிருப்பதால் அதனைப் பின்பற்றுவது மற்ற மனிதர்களது கடமையாகும். யாராவது ஒருவன் தன்னால் நிகழ்ந்த பாவத்திற்காக அல்லாஹ்விடம் தௌபாச் செய்து கொள்வானாயின் அவன் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் சேர்ந்தவனாவான். ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் பாவத்திலேயே மூழ்கியிருந்தால் அவன் ஷெய்த்தானுடன் சேர்ந்தவனாவான்.

ஆனால் மனிதன் ஆயுள் வரை பாவம் செய்யாமல் நேர்வழியில் இருக்க எந்த மனிதனுக்கும் இடம்பாடில்லை. ஏனென்றால் மனிதனைப் படைத்திருப்பதில் ஆரம்பத்தில் அவனுக்கு பூரணத்துவமும் புத்தியும் இருந்ததில்லை. முதலில் அவனுக்கு உண்டாக்கப்பட்டது இச்சையே.இந்த இச்சை ஷைத்தானுக்கு உதவியானதொரு கருவியாக இருக்கிறது. அது மனிதனை மிகைத்து, அவனது மனக் கோட்டையை வசப்படுத்திக் கொண்டது. நப்ஸும் அந்த இச்சையுடன் பழகி அதனிடத்தில் சினேகம் பிடித்துக் கொண்டது. இச்சை மேற்கொண்ட பிறகு இச்சையின் சத்ருவாகவும், மலக்குகளின் ஆதார ஒளியாயுமிருக்கிற புத்தியை அவனில் படைக்கப்பட்டது. பின்பு புத்தி எப்போது வெளிப்பட்டதோ அப்போது கட்டாயமாகத் தௌபாவும் தேவையாயிற்று. எனவே சாதாரண மனிதர்கள் யாவர்க்கும் தௌபா அவசியம். ஆனால் நபிமார்கள் ஒலிமார்கள் விசயம் அப்படி அல்ல. ஏனென்றால் அவர்கள் நுபுவ்வத்தாலும்,

விலாயத்தாலும் படைக்கப்பட்டவர்கள். இக்கருத்தைப் பின் கண்ட திருக்குர்ஆன் வசனங்கள் மெய்ப்பிக்கின்றன.

قَالَ رَبِّ بِمَا أَغْوَيْتَنِي لَأُزَيِّنَنَّ لَهُمْ فِي الْأَرْضِ وَلَأُغْوِيَنَّهُمْ أَجْمَعِينَ.إِلَّا عِبَادَكَ مِنْهُمُ الْمُخْلَصِينَ

15:39,40 : "றப்பே! என்னை நீ வழிகேட்டில் விட்டு விட்டதால் நான்அவர்களுக்கு (ஆதமுடைய சந்ததிகளுக்கு) இவ்வுலகில் (வழிகேட்டைத் தரும் அனைத்தையும்) அவர்களுக்கு அழகாகத் தோன்றும்படிச் செய்து (அதன் மூலமாக) அவர்கள் அனைவரையும் வழிகெடுத்து விடுவேன். அவர்களில் அந்தரங்கச் சுத்தியுள்ள உன் நல்லடியார்களைத் தவிர."

إِنَّ عِبَادِي لَيْسَ لَكَ عَلَيْهِمْ سُلْطَانٌ إِلَّا مَنِ اتَّبَعَكَ مِنَ الْغَاوِينَ

15:42 : "நிச்சயமாக என் அடியார்கள் மீது உனக்கு எவ்வித அதிகாரமுமில்லை. உன்னைப் பின் பற்றி வழி கெட்டவர்களைத் தவிர என்று கூறினான்."

அந்தரங்க சுத்தியுள்ள அல்லாஹ்வின் நல்லடியார்களாகிய நபிமார்கள், ஒலிமார்கள் தவிர மற்ற மனிதர்களை வழிகெடுப்பேன் என்று இப்லீஸ் சபதம் எடுத்துக் கொண்டதை அல்லாஹ்வும் ஏற்றுக் கொண்டபடியால் மனிதன் தவறு செய்யாமலிருக்க முடியாது. அதனால் மனிதர்கள் எல்லோருக்கும் தௌபா அவசியமாயிற்று. ஏனென்றால் மனிதனின் ஜீவன் ஜீவ அகங்காரத்தை உடையது. ஒரு மனிதனின் ஜீவ அகங்காரமும், அதனால் ஏற்படுகின்ற கர்வமும் அவனது இதயத்திலிருந்து நீங்காதவரை அவனுக்கு யாதொரு பனாவுமில்லை. ஏனெனில் இவைகளோ மனிதனின் ஜீவத்தன்மையின் பண்புகளாயிருக்கின்றன. ஒருவனது இதயத்திலுள்ள கர்வத்தைத் தோண்டி எடுப்பதைக் காட்டிலும், ஒரு மலையை வேருடன் களைந்து விடுவது சுலபமானது. அந்த ஜீவத் தன்மை மனிதனை விட்டு நீங்குவதற்கே பிரார்த்தனையும், தவ்பாவும் ஏற்படுத்தப்பட்டன.

தாழ்மையும், அழுகையும் அல்லாஹ்வினால் அங்கீகரிக்கப்பட்டவை. பொறுமை குணத்தில் உறுதி பூண்டிருந்த நபிமார்களும், ஒலிமார்களும் தாழ்மையையும் பிரார்த்தனையையும் கைவிட்டு விடவில்லை. அகிலத்திற்கெல்லாம் அருட்கொடையாய் வந்துதித்த பெருமானார் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூட "ஏ இறைவா! மரண அவஸ்தையை விட்டு என்னைக் காப்பாற்றுவாயாக! (அல்லாஹும்ம அக்தினி அலா ஸகராத்தின் மௌத்தி)" என்று பிரார்த்திக்கிறார்கள். நமது மூல பிதா நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களே இப்லீஸால் ஏமாற்றப்பட்டார்கள் என்றால் நம் போன்ற சாமான்ய ஜனங்கள் தவறை விட்டுத் தப்புவதெப்படி? "தினம் ஒன்றுக்கு நான் எழுபது தரம் தௌபாவும் இஸ்திக்பாரும் செய்கிறேன்" என்று நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். நமது ஆதி பிதா ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களும் நம் உயிர்பிதா நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தௌபா செய்திருக்கும் போது, எந்த மனிதனும் தௌபா

அவசியமில்லை என்று சொல்வதற்கு இடமே இல்லை. தௌபா பற்றி தெய்வத் திருவசனங்கள் இவைகள்:-

فَمَن تَابَ مِن بَعْدِ ظُلْمِهِ وَأَصْلَحَ فَإِنَّ اللَّهَ يَتُوبُ عَلَيْهِ ۗ إِنَّ اللَّهَ غَفُورٌ رَّحِيمٌ

5:39 : “எவரேனும் தம் தீய செயலுக்காக மனம் வருந்தி தம்மைச் சீர் திருத்திக் கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் (அவர் தௌபாவை ஏற்று) மன்னிக்கிறான். நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்போனாகவும், பேரருள் கருணையுடையோனாகவும் இருக்கிறான்.“

قُلْ يَا عِبَادِيَ الَّذِينَ أَسْرَفُوا عَلَىٰ أَنفُسِهِمْ لَا تَقْنَطُوا مِن رَّحْمَةِ اللَّهِ ۚ إِنَّ اللَّهَ يَغْفِرُ الذُّنُوبَ جَمِيعًا ۚ إِنَّهُ هُوَ الْغَفُورُ الرَّحِيمُ

39:53 : “ என் அடியார்களே!(உங்களில்) எவரும் வரம்புமீறி தமக்குத்தாமே தீங்கிழைத்து கொண்ட போதிலும், அல்லாஹ்வுடைய ரஹ்மத்தில் அவர் நம்பிக்கை இழக்க வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன். மிக்கக கருணையுடையவன் என்று (நான் கூறியதை நபியே!) நீர் கூறுவீராக!“

ثُمَّ إِنَّ رَبَّكَ لِلَّذِينَ عَمِلُوا السُّوءَ بِجَهَالَةٍ ثُمَّ تَابُوا مِن بَعْدِ ذَٰلِكَ وَأَصْلَحُوا إِنَّ رَبَّكَ مِن بَعْدِهَا لَغَفُورٌ رَّحِيمٌ

16:119 : “ பிறகு நிச்சயமாக உம் இறைவன் எவர்கள் அறியாமையினால் தீமை செய்து, பின்பு (அவற்றிலிருந்து விலகி) தௌபாச் செய்து தங்களைச் சீர்திருத்திக் கொள்கிறார்களோ அவர்களுக்கு (மன்னிப்பவன்) நிச்சயமாக அதன் பின்பும் உம் இறைவன் பிழை பொறுப்பவனாகவும், கிருபையுடையவனாகவுமிருக்கிறான்.“

وَالَّذِينَ إِذَا فَعَلُوا فَاحِشَةً أَوْ ظَلَمُوا أَنفُسَهُمْ ذَكَرُوا اللَّهَ فَاسْتَغْفَرُوا لِذُنُوبِهِمْ وَمَن يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا اللَّهُ وَلَمْ يُصِرُّوا عَلَىٰ مَا فَعَلُوا وَهُمْ يَعْلَمُونَ

3:135 : “ தவிர, மானக்கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும் அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அவர்கள் மனப்பூர்வமாக அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும் அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் பாவ காரியங்களில் தரிபட்டிருந்து விடமாட்டார்கள்.“

أُولَٰئِكَ جَزَاؤُهُم مَّغْفِرَةٌ مِّن رَّبِّهِمْ وَجَنَّاتٌ تَجْرِي مِن تَحْتِهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا ۚ وَنِعْمَ أَجْرُ الْعَامِلِينَ

3:136 : " அத்தகையோருக்குரிய (நற்)கூலி, அவர்களுடைய றப்பிடமிருந்து மன்னிப்பும் சுவனபதிகளும் ஆகும். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டேயிருக்கும். அவர்கள் அங்கே என்றென்றும் இருப்பர். நற்செயல்கள் செய்வோரின் பிரதிபலன் நன்மையே ஆகும்."

மனிதன் ஸத்வ குணத்திலும், மலக்கின் குணத்திலும் இபுலீசின் குணமாகிய இச்சையின் குணத்திலும் படைக்கப்பட்டிருப்பதலர் மனிதனுக்கு இக்குணங்கள் பிரதிபலிக்கக் கூடியதாயிருக்கிறது. மனிதனை நான் படைத்து "என்னின் நின்றும் ரூஹை ஊதினேன்" என்ற தெய்வத் திருவசனம் மனிதனில் ஸத்வ குணமிருப்பதைக் குறிக்கும். மனிதனில் மலக்கின் குணம், இச்சையின் குணமிருப்பதை பின்கண்ட நாயக வாக்கியம் உறுதிப்படுத்துகிறது.

ஆதமுடைய மகன் இருதயத்திற்குள் ஷைத்தானும் பிரவேசிப்பான். மலக்கும் பிரவேசிப்பார். ஷைத்தான் பிரவேசித்தால் தீய காரியங்களைச் செய்யும்படியும், நன்மை செய்யாதிருக்கும்படியும் தூண்டுவான். மலக்கு பிரவேசித்தால் நல்ல கருமங்களைச் செய்யும்படியும், உண்மையை நிலைநிறுத்தும்படியும் தூண்டுவார். யாருக்காவது இம்மாதிரியான (மலக்கு பிரவேசிக்கும்படியான) பாக்கியம் கிடைத்தால் அவன் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தட்டும். (ஷைத்தான் பிரவேசிக்கும் படியான சந்தர்ப்பம் ஏற்பட்டால் துரத்தப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடட்டும்." (திர்மிதி -ஹக்கானி)

"நிச்சயமாக ஷைத்தான் மனிதனில் இரத்தம் ஓடும் துறைகளிலெல்லாம் ஓடித்திரிகிறான்." (புகாரி., முஸ்லிம்)

"உங்களுள் ஒவ்வொருவருடனும் (தீய வழியில் தூண்டும்) ஒரு ஜின்னும் (நல்ல வழியில் தூண்டும்) ஒரு மலக்கும் சாட்டப்படாமல் இருக்கவில்லை" என நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்ற போது அவர்களின் ஸஹாபாக்கள் நாயகம் அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! தங்களுடனுமா?" என்று கேட்கஇ "(ஆம்) என்னுடனும்தான். எனினும் அல்லாஹ் (அவனுக்கு எதிராக) எனக்கு உதவி புரிந்திருக்கிறான். நல்லதைக் கொண்டே தவிர (தீயதைக் கொண்டு) என்னை தூண்ட மாட்டான்" என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விடை பகர்ந்தார்கள். (முஸ்லிம்)

கீமியாயே ஸஆதத்து (4ஆவது வால்யூம்) பக்கம் 15ல் பின் கண்ட நாயகவாக்கியம் குறிப்பிடப்பட்டுள்ளது. "இபுலீசானவன் லஃனத்தை அடைந்த போது அல்லாஹ்தஆலாவிடத்தில், "என் ஆண்டவனே! உன் பெருமையினாணை, மனிதனுடைய உடம்பில் உயிர் இருக்கிறவரையில் நான் அவன் மனதை விட்டு வெளியே போக மாட்டேன்" என்றான். அதற்கு அல்லாஹுத்தஆலா "என் பெருமையினாணை. அவன் தேகத்தில் ஆன்மாயிருக்கிறவரையில் தௌபாவின் வாசலை அவனுக்கு நான் அடைக்க மாட்டேன் என்றான்".

மேற்கண்ட விபரங்களிலிருந்து தெரியவருவது என்னவென்றால், மனிதனது தேகம் இருக்கும்வரை மனிதனில் தமோ குணம் ஏற்படாமல் இருப்பதில்லை என்பது தெளிவாகிறது. அதுபோல் மனிதன் தேகத்தில் ரூஹு இருக்கும்வரை தௌபா செய்தால் ஆண்டவன் ஏற்றுக் கொள்கிறான் என்பதும் தெரியவருகிறது. ஆகையால், தமோ குணத்தை அடக்கி மலக்கின்

குணத்தில் தரிபட பக்திமார்க்கம் அவசியம். மலக்கின் குணத்தின் மூலம் ஸத்வ குணத்தில் தரிபட ஞானமார்க்கம் அவசியம். பக்தி மார்க்கம் இனியதாக அமைய வல்லது. ஞானமார்க்கமோ அருவியைத் திரும்பவும் பலவந்தமாக அதன் மூல ஸ்தானமாகிய மலை உச்சிக்குக் கொண்டு செல்வதற்குச் சமம்.

முக்தியின் பொருட்டு பாபத்தைக் கடந்து நாம் புண்ணியம் செய்ய வேண்டும். மலக்கின் குணத்தைக் கொண்டு இச்சையின் குணத்தை ஒழிக்க வேண்டும். பிறகு இவ்விரு குணங்களையும் சத்துவத்தில் ஒடுக்க வேண்டும். பிறகு அதீதத்துக்குப் போக வேண்டும். பாபத்தைக் கடந்து புண்ணிய கருமங்கள் செய்வதற்கு ஷரீஅத் சட்டதிட்டங்களை அனுசரிக்க வேண்டும். இங்கு தமோ குணத்தை ஒழித்து மலக்கின் குணத்தில் தரிபட பக்தி மார்க்கம் அவசியமாகிறது. பிறகு இவ்விரு குணங்களையும் சத்துவத்தில் ஒடுக்க ஞான மாாக்கம் அவசியமாகிறது. ஞானமார்க்கத்தில் தரிபட ஒருவனுக்கு பீர் என்னும் குரு அவசியமாகிறார்.

பஞ்சுக்குரிய வெப்பத்தினால் தானாக தீப்பற்றுவது இல்லை. ஒரு இணை குவிந்த லென்ஜை பஞ்சின் மேற் பக்கத்தில் சூரியனை நோக்கிப் பிடித்தால் பஞ்சு உடனே தீப்பற்றிக் கொள்ளும். இங்கு சாதகன் பஞ்சாகவும், சூரியன் ஹக்காகவும், குரு லென்ஸ் கண்ணாடியாகவும் இருக்கிறார். ஞானமார்க்கத்தில் வந்தபிறகு பக்தி மார்க்கம் தேவையில்லை என்று முஸ்லிம்களின் ஒரு சாரார் சொல்வதுண்டு. அது தவறு . இதுபற்றி அடுத்த அத்தியாயத்தில் விபரிப்போம்.

## அத்தியாயம் 6

## தௌஹீதும் ஷரீஅத்தும்

### (பக்தி மார்க்கமும், ஞான மார்க்கமும்)

"வேற்றுமை யென்னும் வியாதி பிடித் தோர்க்குச்

சாற்று மருந் துதான் தௌஹீது – ஏற்ற

ஷரீஅத்து பத்தியமாஞ் சார அறிந்து கொள்வாய்

பெரிய வயித்தியனாம் பீர்" (மெய்ஞ்ஞானத் தெளிவு)

முஸ்லிம்களில் ஒருசாரார் ஷரீஅத்தை கடைபிடித்தால் மட்டும் போதும். அதாவது பக்தி மார்க்கத்தைக் கடைபிடித்தால் மட்டும் போதும். ஞானமார்க்கம் தேவையில்லை என்கிறார்கள். முஸ்லிம்களில் மறுசாரார் ஞானமார்க்கத்தை கடைபிடித்தால் மட்டும் போதும். பக்தி மார்க்கம்தேவையில்லை என்கிறார்கள்.

இன்னொரு சாரார் ஞானமார்க்கம் தேவைதான். ஆனால் உலகத்தில் நாம், மனைவி மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களை முடித்து பக்தி ஞானத்தையம் சரியாகக் கடைபிடித்து பின் ஞான மார்க்கத்திற்கு போகலாம் என்பார்கள். கடல் அலை ஓய்ந்தபின்

குளிக்கலாம் என்று சொல்பவர்களை ஒக்கும் இவர்கள் யோசனை. மனைவி, மக்களுக்கு நாம் செய்ய வேண்டிய காரியம் நாம் புதைகுழி செல்லும்வரை ஓயாது. அதுபோல் பக்தி மார்க்கத்தையும், பூரணமாக கடைபிடித்தல் என்பதும் இவன் தேகியாக இருக்கும்வரை பூரணமாக செய்யமுடியாது. ஞானமார்க்கத்தைக் கடைப்பிக்கும்போதுதான் பக்தி மார்க்கமும் பூரணத்தை அடையமுடியும். எனவே ஞான மார்க்கத்தை பக்தி மார்க்கத்தோடு கைக் கொள்ள வேண்டியது அவசியம்.

பக்தி மார்க்கத்தைக் கடைபிடித்தால் ம்டும் போதும். ஞானமார்க்கம் தேவையில்லை என்பவர்களும், ஞான மார்க்கத்தை கடைபிடித்தால் போதும் பக்தி மார்க்கம் தேவையில்லை என்று சொல்பவர்களும் தங்கள் தவறை உணர்ந்து கொள்வதில்லை. தௌஹீது என்பது ஞானமாகவும், ஷரீஅத் என்பது அந்த ஞானத்தை அடைவதற்குரிய மார்க்கமாகவும் இருக்கிறது. ஞானத்திற்காகவே மார்க்கம் வந்துள்ளது. (அவ்வலதீன ம∴ரிபத்துல்லாஹ்) எனவே, தௌஹீதில்லாமல் ஷரீஅத் இல்லை. ஷரீஅத்தில்லாமல் தௌஹீது இல்லை. ஷரீஅத்தும், தௌஹீதும் கஸ்தூரியும் அதன் வாடையும் போல் ஒன்றைவிட்டு ஒன்றினைப் பிரிக்க முடியாது. இதனால்தான் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இதைப் பற்றிக் குறிப்பிடும்போது "ஷரீஅத்தில் தௌஹீதும், தௌஹீதில் ஷரீஅத்தும்" என்றார்கள்.

ஷரீஅத்தில் சட்டதிட்டங்கள் சரீரத்திற்கே அல்லாது ரூஹுக்கு அல்ல. சரீரத்தை நான் என்று அபிமானிப்பவர்கள் தான் ஷரீஅத் சட்டதிட்டப்படி வெளிரங்க வணக்கத்தைப் பேண வேண்டும். "ரூஹுல் குத்ஸி" நான் என்று விளங்கியவர்களுக்கு ஷரீஅத் விதிக்கும் வெளிரங்க வணக்கம் தேவையில்லை என்று சொல்வோருமுண்டு. மனிதன் கண்டமும் அகண்டமும் (ஞானமும், அஞ்ஞானமும்) பொருந்திப் படைக்கப்பட்டவன். மனிதன் கண்டத்தைக் கடக்க பக்தி மார்க்கமென்ற ஒரு சக்கரத்தையும், அகண்டத்தில் தரிபட ஞானமார்க்கம் என்ற ஒருசக்கரத்தையும் பொருந்திப் படைக்கப்பட்ட வண்டி போன்றவன். இரு சக்கரமும் கழன்றால்தான் மனிதன் என்ற வண்டி ஓட முடியும். ஒரு சக்கரம் பக்தி மார்க்கமாகவும், ஒரு சக்கரம் ஞான மார்க்கமாகவும் இருக்கிறது.

வெளிரங்க வணக்கமாகிய பக்தி மார்க்கத்தில் அப்து, ரப்பு (ஆண்டான், அடிமை) என்ற நிலை ஏற்படுவதால் உள்ளமை இரண்டாகிறது. அதனால் அவ்வணக்கம் ஷிர்க்கை ஏற்படுத்துவதாயிருக்கிறது. அல்லாஹ் பாவத்தை மன்னித்தாலும் ஷிர்க்கை மன்னிக்க மாட்டேன் என்று சொல்வதால் உள்ளமை வேறுபடுத்த காரணமாயிருக்கும் பக்தி மார்க்கம் தேவையில்லை அத்வைதிகளில் ஒருசாரார் சொல்வதுண்டு. இது தவறு. ஹக்கின் அறிவில் தரிபட்டிருந்த படைப்புகளே கோலங்களாகியிருக்கின்றன. இவைகளுக்கு ஹக்கின் உள்ளமையிலிருந்து வேறாக யாதொரு உள்ளமையும் கிடையாது. ஹக்கின் உள்ளமையிலிருந்து வெளியான பண்புகளே கோலமாகி ஹக்கை வணங்குகிறது என்பதே அத்வைதிகளின் ளாஹிர் வணக்கமாகும். இம்முறை வணக்கத்தில் உள்ளமை வேறுபட வழியில்லை. ஏனென்றால் இங்கு உள்ளமை இரண்டு என்பது ஸ்தாபிதமாகவில்லை. மேலும் "லாஇலாஹ இல்லலல்லாஹ்" என்பதே உள்ளமையை ஒன்றுபடுத்துவதாயிருக்கிறது.

ஹக்குடைய உள்ளமை வேறு இ ஹல்குடைய உள்ளமை வேறு என்ற நிலையில் ஹக்கை வணங்கினால்தான் மேற்சொல்லிய அத்வைதிகள் நினைக்கும் ஷிர்க் ஏற்படுகிறது. அப்து இ ரப்பு என்று நினைப்பதே ஷிர்க் என்றால் உலகத்தில் நாம் நினைத்து செயல்படும் காரியங்களில் அநேகம் ஷிர்க்காகிவிடும்.

நாயன் என்று பெயர் சொல்லப்படுவது தாத்தைக் கொண்டும், சிபாத்தைக் கொண்டும், அஸ்மாவைக் கொண்டும், அப்ஆலைக் கொண்டுமாயிருக்கும். இவைகளில் ஒன்றை நீக்கினாலும் நாயன் என்பது நிறப்பமாக மாட்டாது. தாத்திலிருந்தே சிபாத்து, அஸ்மா, அப்ஆல் தோன்றுகிறது. தாத்திலிருந்த உள்ளிடைத் தத்துவங்களாகிய சிபாத்துகள் தங்களது தத்துவங்களை வெளியாக்க அஸ்மா என்ற நாமத்தை தரித்து அப்ஆல் என்ற தங்கள் செயல்களை வெளியாக்குகிறது. பிரபஞ்சத்தில் உள்ள வஸ்துகளெல்லாம் வெளிப்படுத்தும் அற்புதங்களை அவ்வஸ்துக்களில் சாட்டாமல் ஹக்குதான் தன் மகிமையை அந்த அவ்வஸ்துகளின் மூலம் வெளிப்படுத்துகிறான் என்ற நிர்ணயத்தில் ஹக்கைப் புகழ்வதே யதார்த்த புகழ்ச்சியாகும். இதுவே அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று சொல்வதாகும். தாத்து, சிபாத்து, அஸ்மா, அப்ஆல் ஆக இருப்பவனே அல்லாஹ். ஆகையால் இந்த நான்கில் எந்த ஒன்றையும் ஹக்கிற்கு அந்நியமாகப் பார்க்கக் கூடாது. இந்த நான்கில் எந்த ஒன்றிலும் ஹக்கை மட்டுப்படுத்துவதும் கூடாது. ஹக்கைத் தவிர, பிரபஞ்சத்தை ஹக்கிற்கு அந்நியமென்று நாஸ்தியாக்கவும் கூடாது.

ஒரு தர்வேஸ், ஜுனைதுல் பக்தாரி ரலியல்லாஹு அன்ஹு அவர்களது ஆசிரமம் செனறு "அல்ஹம்துலில்லாஹ்" என்று மட்டும் சொன்னதற்கு ஜுனைது நாயகம் அவர்கள், "அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்" என்று சொல்லும் என்றார்கள். அதற்கு அந்த தர்வேஸ் ஹக்குடன் இணைத்துச் சொல்வதற்கு சர்வலோகங்களும் எங்கே இருக்கிறது? என்றார். தர்வேஷ் ஹக்கை மட்டும் தரிபடுத்தி பிரபஞ்சத்தை இன்மையாக்கினார். ஏனென்றால் "பனா" நிலையிலிருந்தார். ஜுனைத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "பகா" நிலையிலிருந்ததால் "அதம்" ஆகிய "இன்மை" என்னும் கண்ணாடியிலே "தாத்து"டைய தோற்றங்களை நோட்டமிடுதலை சுட்டிக் காட்டினார்கள்.

அல்லாஹ் தான் ஒரு காரியத்தை முடிக்க இன்னாரை நாடு என்று நாட்டும் போடுபவனும், அந்நாட்டத்தை இன்னொரு கோலத்திற்கு நாட்டு போட்டு முடிப்பவனுமவனே.

ஹக்கைத் தவிர பார்ப்பவனும், கேட்பவனும், பேசுபவனும், யாருமில்லை. கொடுப்பவனும், வாங்குபவனும், வைத்திருப்பவனும் யாருமில்லை. ஹக்கைத் தவிர. இந்நிலையில் தரிபடுவதே ஷிர்க்கைப் போக்கி, தௌஹீதை ஸ்திரப்படுத்துவதாயிருக்கும். ஹக்கின் உள்ளமையைத் தவிர பிறிதொரு உள்ளமை இல்லை என்பதை ஷெய்கு ஞானியார் அவர்கள் தங்கள் பாடலில் வலியுறுத்துவதைப் படியுங்கள்.

"காலாகினாய் கையாகினாய் கண்ணாகினாய் முகமாகினாய்

நாவாகினாய் நடுவாகினாய் நானாகினாய் நீயாகினாய்

சூலாகினாய் பாலாகினாய் சுகமாகினாய் அகமாகினாய்

மாலாகியென் னுளமீதருள் மவுஜூதுயா மவுஜூதுநீ“

பிரபஞ்சத்தை அல்லாஹ்வின் வெற்று எண்ணம் என்று சொல்லக் கூடாது. அப்படி எண்ணி அவன் அறிவில் தோன்றிய கோலங்களைப் பொய்யாக்கினால் அவன் அறிவு பொய் என்று ஆகிவிடும் என்பது அத்வைதிகளின் கொள்கை. அதுபோல் அவன் அறிவு விதித்த வெளிரங்க வணக்க வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஹக்கின் வெற்றெண்ணம் போல் நாம்அதை ஒதுக்கினால் அவன் சம்பூரண அறிவினின்றும் வெளிப்பட்ட வெளிரங்க வணக்க ஏற்பாடுகள் யாவும் ஹக்கின் அறிவில் பொய் என்று ஆகிவிடும். இவ்விசயத்தில் நாம் எண்ணுவது தான் பொய். அவன் அறிவில் தோன்றிய அறிவுரைகள் பொய்யாகாது. அப்து, ரப்பு என்ற ஸ்தானத்தில் உள்ளமையை வேறுபடுத்தாது வணங்குவதே அத்வைதிகளின் வெளிரங்க வணக்கமாகும்.

தொழுகையில் நீ உள்ளமையை வேறுபடுத்தி வணக்கத்திற்காக வேண்டி நீ ஒரு விக்கிரகத்தை தயாரித்துக் கொள்ளாதே. நீ, உன்னை ஹக்குக்கு வெறென்றும், ஹக்கு உனக்கு வேறென்றும் கருதுவாயாகில், நீ ஷிர்க்குடைய அஸ்திவாரத்தை நிலை நாட்டிவிட்டாய். இரண்டாவது என்று ஒன்று வரும்பொழுது “வேறு“ என்பது உண்டாகிறது. இரண்டாவது என்பது இல்லாவிடில் ஒன்று மாத்திரமே தரிபட்டிருக்கிறது. ஆரம்பகாலம் தொடுத்து ஹக்குடைய “வேறு“ என்பது என்றும் இருந்ததில்லை. எனவே, ஏன் உன்னை வீணில் வேறு என்று அழைத்துக் கொள்கிறாய்? இது அத்வைதிகளின் கொள்கையாகும்.

வெளிரங்கத் தொழுகை மனிதனின் ஜீவ அலங்காரத்தை ஒடுக்குவதற்காக ஏற்பட்டதாகும். நடுத் தொழுகை கல்பின் தொழுகை. ஹக்கை ஹக்கில் தரிப்படுத்துவதற்காக ஏற்பட்டதாகும். வெளிரங்கத் தொழுகைப் பக்தி மார்க்கமாகவும் கல்பின் தொழுகை ஞான மார்க்கமாகவும் இருக்கிறது.

வெளிரங்கத் தொழுகை ருக்கூ.ஃ, சுஜூது உடையது. நடுத் தொழுகை ருக்கூ.ஃ, சுஜூது இல்லாதது. இவ்விரு தொழுகை பற்றிய தெய்வத் திருவசனமிது:-

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا ارْكَعُوا وَاسْجُدُوا

குர்ஆன் 22:77 : “ஈமான் கொண்டவர்களே! நீங்கள் ருக்கூ.ஃ செய்யுங்கள். இன்னும் சஜ்தாவும் செய்யுங்கள்...“

حَافِظُوا عَلَى الصَّلَوَاتِ وَالصَّلَاةِ الْوُسْطَىٰ

குர்ஆன் 2:238 : “ தொழுகைகளை (குறிப்பாக) நடுத்தொழுகையை நீங்கள் விடாது தொழுது கொள்ளுங்கள்“

மூலத்தை அறிந்து அதில் ஐக்கியப்பட அப்பியாசிப்பவர்களுக்கு வெளிரங்க வண்கம் தேவையில்லை என்று இச்சாதனை புரிவோர் சிலர் வெளிரங்க வணக்கங்களில் பாராமுகமாயிருக்கின்றனர். இவ்விதமிருந்தால் அவர்கள் தங்கள் சரீர இச்சைகளைத் தொலைக்க முடியாமல் போய்விடும் என்பதை அவர்கள் உணரவில்லை. ஏனென்றால், ஷரீஅத்தையும், தரீகத்தையும் ஒழுங்கான முறையில் எடுத்து நடத்தப்படாவிட்டால் ஹகீகத்தாகிய அகமியம் சரிவர உண்டாகாது. எழுது கோலானது சரியானபடி சீவப்படாவிட்டால் எழுத்துக்கள் ஒழுங்காக அமையாது. தவ்ஹீதை நிலைநாட்ட வந்த பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களது உத்தம ஸஹாபாக்களும், குத்புமார்களும், இமாம்களும் எக்காரணம் கொண்டும் பக்திமார்க்கமாகிய வெளிரங்க வணக்கங்களை விட்டுவிடவில்லை. தௌஹீதிற்கு அரும்பெரும் விளக்கங்கள் தந்த முஹையதீன் அப்துல் காதிர் ஜீலானி, முகைதீன் இப்னு அரபி, முஹம்மது கஸ்ஸாலி, அப்துல் கரீம் ஜீலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்கள் தாங்கள் எழுதிய அரும்பெரும் கிரந்தங்களில் வெளிரங்க வணக்கத்தை விட்டுவிட எழுதவில்லை. “லாஇலாஹ“ என்பதில் குறிப்பானது ஒழிக்கப்பட்டு “இல்லல்லாஹு“வில் குறிப்பற்றது உறுதிப்படுத்தப்படுகிறது.

எனவே, அறிந்து கலிமா சொன்னவன் ஷிர்க்கைப் போக்கித் தௌஹீதைத் தரிபடுத்தியவனாயிருக்கிறான். இவர்களது பக்தி மார்க்கத்தில் ஷிர்க்கு புக இடமில்லை. சரிகை, கிரிகையினின்றும் தன்னைத் துண்டித்து அறிவை அடிப்படையாகக் கொண்ட வெறும் விசுவாசத்தினாலும் அவற்றில் சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தைகளாலும் திருப்தி அடைபவன் எவனோ, அவனே ஒரு “முல்ஹிது“ என்னும் வழிகேடனாவான். “ஹால்“ என்னும் நிலையைப் பெற்று தனது பார்வையில் யதார்த்த உள்ளமை அடைந்து, ஷரீஅத்தாகிய சரியையின் யாதொரு விசயத்தையும், தான் “ஹால்“ என்ற நிலையினால் மிகைக்கப்பட்டுவிட்ட நேரத்திலே ஒழிய மற்ற நேரங்களில் மறக்காதிருப்பவரே உண்மையான “முவஹ்ஹிது“ என்னும் அத்வைதியாவார்.

கல்பின் தொழுகை மூலம் சதா ஹக்கனுடன் ஐக்கியமடைந்திருப்பவர்களுக்கு வெளிரங்கத் தொழுகை அவசியமில்லை என்ற அத்வைதிகளில் சிலர் கருத்து கூறுவதுமுண்டு. பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சதாவும் ஹக்கனுடன் ஐக்கியமடைந்தவர்களாகவே இருந்தார்கள். பெருமானார் வாழ்க்கையிலேயே மிக ஏற்ற பதவியான மி.்ராஜை அடைந்த பிறகும் அவர்கள் வெளிரங்கத்தொழுகையை விட்டுவிடவில்லை. பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தேகம் விடுவதற்கு இரண்டு வருடத்திற்குள் வெளியான “இதாஜா அ நஸ்ருல்லாஹி வல் பத்ஹு“ என்ற சூராவில் அல்லாஹ் அறிவிப்பதாவது:- “அல்லாஹ்வின் உதவியும்இ வெற்றியும் வந்து விட்டபோதும், அல்லாஹ்வின் மார்க்கத்தில் ஜனங்கள் கூட்டங்கூட்டமாக பிரவேசிப்பதை நீர் கண்டபோதும் உமது ரட்சகனின் துதியைக் கொண்டு நீர் (அவனைத்) தூய்மைப்படுத்தும். மேலும் அவனிடம் மன்னிப்புக் கோரும். நிச்சயமாக அவன் மன்னிப்புக் கோருவரை மிகவும் அங்கீகரிக்கப்படுபவானயிருக்கிறான்.

நபி ஆதம்அலைஹிஸ்ஸலாம் அவர்களிலிருந்து துவக்கப்பட்ட மிஃராஜ் நோக்கிய பயணம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் பூர்த்தியடைந்தது. நுபுவத்திற்கு முத்திராங்கமானவர்களாகவும், நபிமார்களில் மறைத்து வைக்கப்பட்ட விலாயத்துக்கு உதய ஸ்தானமாகயிருந்த பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “எந்நோக்கத்திற்காக அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டார்களோ அந்நோக்கம் அல்லாஹ்வின் உதவியால் வெற்றியடைந்த போதும், அவர்கள் ரட்சகனைத் துதிப்பதையும், அவனிடம் மன்னிப்புக் கோருவதையும் விட்டுவிடக் கூடாது என்பதே மேற்சொன்ன ஆயத்தின் கருத்தாகும்.

மேலும் “இன்னா அஃதைனா கல்கௌதர்“ என்ற சூராவில் அல்லாஹ் அறிவிப்பதாவது:- “நிச்சயமாக நாம் உமக்கு “கௌதரை“ (அபரிதமான நன்மைகளைக்) கொடுத்திருக்கிறோம். எனவே, (இதற்கு நன்றி தெரிவிக்கும் நிமித்தம்) உமது ரட்சகனுக்காக நீர் தொழுது, பலியும் இடும். நிச்சயமாக, உமது பகைவர் தான் சந்ததியற்றுப் போய்விட்டான்“. இந்த ஆயத்திலும் “கௌதர்“ என்ற அபரிமிதமான நன்மைகளை பெருமானாருக்கு அல்லாஹ் அள்ளி வழங்கியதற்கு நன்றி தெரிவிக்கும் நிமித்தம் ரட்சகனைத் தொழும்படி அல்லாஹ் அறிவிக்கிறான். இந்த ஆயத்துக்களின் கருத்திற்கு இணங்க பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் ஜீவிய காலம் வரை வெளிரங்க வணக்கத்தை விட்டுவிடவில்லை. இந்த ஆயத்தில் “பலியிடும்“ எனக் குறிப்பிடுவது உடல், பொருள், ஆவியை ஹக்கிற்காக தத்தம் செய்தல் என்பது கருத்தாகும். நம் உடலை அவன் உடலாகவும், நம் பொருளை அவன் பொருளாகவும், நம் உயிரை அவன் உயிராகவும் கிரகித்து வாழ்வதே அல்லாஹ்வில் தத்தம்செய்தல் என்பதின் கருத்தாகும். “லா அனா இல்லாஹு“ “நான் என்பது இல்லைஇ ஹக்கைத் தவிர“ என்ற சித்தாந்தத்தை தரிபடுத்தலே “பலியிடுதல்“ என்பதின் கருத்தாகும்.

மேற்கண்ட விளக்கத்திலிருந்து தெரிவது என்னவென்றால், மனிதன் ஞானமார்க்கத்தில் உச்சகட்டத்தை அடைந்த போதும் அம்மனிதன் பக்தி மார்க்கத்தை தேகம்விடும் வரை கைவிடக்கூடாது என்பதே இஸ்லாத்தின் சித்தாந்தமாகும். இதனை ஞானப் பிரகாசத்தில் பின்வருமாறு உறுதிப்படுத்தப்படுகிறது. “ரூஹின் ஸுக்ராகிய கல்பின் தொழுகையையும், சரீரம் எடுத்து வந்ததில் ஸுக்ராகிய “ளாஹிர்“ தொழுகையையும் பூண்டுகொள். அப்பொழுது தான் பூரண இன்சானாகுவாய்“(ஞானப் பிரகாசம்)

ஷரீஅத், தௌஹீது பற்றி கௌதுல் அஃலம் சொல்வதாவது:- “மனிதன் என்ற பறவை இரண்டு இறக்கைகளை உடையவன். ஒன்று மஃரிபா என்ற இறக்கையும், இன்னொன்று ஷரீஅத் என்ற இறக்கையுமாகும். இரண்டு இறக்கையுமில்லாமல் மனிதன் என்ற பறவை பறக்க முடியாது“ இதே கருத்தை குத்புல் அக்பர் அபுல்ஹஸன் ஷாதுலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வலியுறுத்தியிருப்பதை நபகாதுல் அன்பர் பிமனாகிபி குத்புல் அக்பர் என்ற கிதாபில் பக்கம் 175ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் விபரமாவது:- அபுல்ஹஸன் அப்பாஸ் முர்ஸி அவர்கள் சொல்கிறார்கள்: “அஹ்மதே! ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹுத்தஆலா

அவனது குத்ரத் (சக்தி)என்னும் கைகொண்டு படைத்து அவர்களுக்குத் தன் மலக்குகளை சுஜூது செய்ய வைத்து ஆகிரத்து நாளில் பாதி 500 வருஷம் அவர்களை சொர்க்கத்தில் குடியிருத்தாட்டி வைத்திருந்து அவர்களைப் பூமியில் இறக்கினான். அல்லாஹ்வின் ஆணை. அவர்களை சுவர்க்கத்தில் நின்றும் பூமியில் இறக்கினது அவர்களது கத்ரை (மரியாதையை) குறைக்க நாடிஅல்ல. கத்ரைக் கூட்டத்தான் இறக்கினான். அவர்களைப் படைக்கும்முன்னே "இன்னி ஜாயிலுன் பில்அர்லி கலீபா" "திடனாக நான் பூமியில் கலீபாவை ஆக்குவேன்" என்று சொல்லும்போது ஆதம் வானத்திலுமில்லை. சுவர்க்கத்திலுமில்லை. அவர்கள் பூமியில் இறங்கினது சங்கை பொருந்திய இறக்கமே தவிர தாழ்மை பொருந்திய இறக்கமல்ல.

அதன் விபரமாவது: ஆதம் நபி சுவர்க்கத்தில் இருக்கும்போது அல்லாஹ்வை மஃரிபா என்னும் ஞானம் கொண்டு வணங்கினார்கள். தக்லீல் என்னும் ஏவல், விலக்கலைக் கொண்டு வணங்குவதற்காக அவர்களை பூமியில் இறக்கினான்.

இரண்டு வணக்கமும், அதவாவது: மஃரிபா என்ற ஞான வணக்கமும் ஏவல், விலக்கல் என்ற ஷரிஅத் வணக்கமும் நிரப்பமாகவே அவர்கள் கிலாபத்திற்கு தகுதியானார்கள்.

ஆதமினின்றும் உமக்குப் பாக்கியமுண்டு. உம்முடைய துவக்கம் ரூஹுடைய ஆலத்தில் மஃரிபா என்னும் சுவர்க்கத்தில் ஆகியிருந்தது. நீர் இப்போது தக்லீல் என்னும் வணக்கம் வணங்க உம்மை பூமியில் இறக்கப்பட்டது.

ஆதமில் இரண்டு வணக்கமும் நிறப்பமானது போல உம்மிலும் இரண்டு வணக்கமும் நிறப்பமானால் நீரும் கிலாபத்திற்குப் பாத்தியமாவீர். கருத்தாவது குதுப் ஆவீர் என்று சொன்னார்கள்.

*(முதல் பகுதி முடிந்தது)*